**Sales Reps. Welcome**

**Raja M. Mahendran,** P. Eng.
(Broker / Owner)
* INDEPENDENTLY OWNED AND OPERATED

For All your Real Estate & Investments Needs!

**HomeLife GTA Realty Inc.***
1711 McCowan Rd. Suite #206, Toronto
145 Traders Blvd # 28, Mississauga
416.321.6969 / 905.712.2666



16 வது வருடத்தில்

# விளம்பரம்™

VLAMBARAM™

☎ 416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
Fax 416-282-4978



வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
**WALK IN DENTAL CLINIC**
Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்
OPEN 7 DAYS
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்



நதி 16 | பாலம் 15 | சமூக முன்னேற்றப் பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | AUGUST 01, 2006





**பத்தாம் எண்ணின் மகிமை** 06





**பொய் என்னும் பேய்** 14


**5வது சர்வதேச தமிழ் குறுந்திரைப்பட விழா செப்ரெம்பர் 16, 2006**

## ஐ.நா. அதிகாரிகளும் பலி

இஸ்ரவேலின் மிலேச்சத்தனமான தாக்குதலில் ஐ. நா அதிகாரிகளும் பலி.

கனேடிய அதிகாரியும் கொல்லப்பட்டார்

லெபானை தளமாக கொண்டு செயற்பட்டு வரும் பாலஸ்தீன விடுதலை இயக்கங்களில் ஒன்றான ஹெஸ்புல்லா என்ற இயக்கத்தை முற்றாக அழித்துவிட வேண்டும் என்ற நோக்கத்தில் இஸ்ரவேல் லெபனான் மீது மிலேச்சத்தனமான தாக்குதலில் ஈடுபட்டுள்ளது. தெற்கு லெபானானில் இஸ்ரவேல் நடத்தும் இந்த தாக்குதலில் பல பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதற்கும் மேலாக ஐக்கிய நாடுகள் சபையின் சார்பில் செயல் பட்டு வந்த அதிகாரிகளும் இஸ்ரேலின் குண்டுத்தாக்குதலில் பலியாகிஉள்ளனர். இதில் கனேடிய அதிகாரியும் பலியாகிஉள்ளார்.

இதற்கு மன்னிப்புக் கேட்டுள்ள இஸ்ரவேல் " போர் என்றால் அதில் தவறுகளும் நிகழும்" என்று கூறியுள்ளது.

இஸ்ரவேலின் இந்த அநீதியான போர்குறித்து சர்வதேசங்கள் கவலை கொண்டுள்ளன. ஆனால் இந்த சண்டித்தனத்தை நிறுத்து இவர்களால் முடியவில்லை. அமெரிக்க, பிரிட்டிஸ் அரசுத் தலைவர்கள் இஸ்ரவேலின் பக்கமே தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரவேலின் தாக்குதலுக்கு எதிராக பல் வேறு நாடுகளில் இருந்தும் மக்கள் தமது எதிர்ப்புக் குரலை தெரிவித்து வருகின்றனர். ஆனால் இஸ்ரவேல் இதை எந்தக் காலத்திலும் செவிசாய்ப்பதில்லை என்பதை உலகம் அறியும்.

# கனடாவில் கறுப்பு யூலை நிகழ்வு

### உறவுகள் உரிமை பெறும் வரை உறங்கோம்




இருபத்து மூன்றாண்டுகளின் முன்னர், சிறீலங்கா அரசாங்கத்தின் நேரடி
மேற்பார்வையில் நடந்த இரத்த நெடி பதித்த கோர யூலையின் பயங்கரங்கள் ரொறன்சோ கனடாவில் நினைவு கூரப்பட்டது.

கனேடியத்தமிழர்களும், தமிழர் அல்லாத கனேடிய நண்பர்களும் இந்த நிகழ்வில் பங்கேற்று தமது ஆழ்ந்த கவலையை தெரிவித்தனர்.

கனேடிய தமிழ் சமூகத்தின் பன்முகப்பட்ட வளர்ச்சிப் பரி-மாணத்தைத் தெளிவுபடக் கூறும் மற்றுமோர் விடயம் இன்று கனடாவில் பதிவானது.. கனேடிய சரித்திரத்தில், முதன் முதலாக, தமிழரின் அவலம் ஒரு இளம் தமிழ் கனேடிய ஊடகவியலாளரால், ஒட்டுமொத்தக் கனடாவிலும் அதிக பிரதிகள் விநியோகமாகும் ரொறன்ரோ ஸ்ரார் பத்திரிகையில், பதிவு செய்யப்பட்டது. எமது அவலங்களைக் கேட்பாரில்லையா என்ற நிர்க்கதியான நிலை மாறி எமது அவலத்தை நாமே கூறும் மகிழ்சிதரும் நிலை துளசி சிறீகாந்தன் என்ற கனேடிய தமிழ் ஊடகவியலாளரால் நனவானது. இக்கட்டுரையில், 83 யூலையில் தமிழர்கள் அனுபவித்த இன்னல்கள் கனேடியத் தமிழர்களின் வாக்கு மூலங்களாக, சிங்களத்தின் முகத்திரையைக் கிழிப்பனவாக இடம்பெற்றுள்ளன.

இந்த நிகழ்வில் கனடாவின் மூன்று பிரதான அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து தமிழரின் தொடரும் அவலங்கள் பற்றி தாம் நன்கு அறிவதாகவும், இந்த இன்னல்களை நிரந்தரமாக நீக்கும் வகையில் கனேடிய அரசு செயற்பட வேண்டும் என்ற தொனிப்படவும் உரையாற்றினார்கள். அத்தோடு பெரும் எண்ணிக்கையான கனேடிய ஊடகத் துறையினரும் இந்நிகழ்வில் பங்கேற்று விவரம் சேகரித்துச் சென்றமை குறிப்பிடத் தக்கது.

மொத்தத்தில், ஈழத்தில் எமது உறவுகள் உரிமை பெறும் வரை கனேடிய உறவுகள் உறங்கமாட்டோம் என்று அடித்துக் கூறிய இன்னுமொரு நிகழ்வாக, இந்நிகழ்வு சிறப்புற நடந்தேறியது.


**சந்திரமௌலீஸ்வர சிவாலயம்**



ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்
காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.

**HOLMAN**
Insurance Brokers LTD.
Balan Kanapathipillai, R.I.B. (ON)



• Auto • Commercial • RESP
• Home • Life • RRSP
416.321.1515 • 416.452.6975
4433 Sheppard Ave. E. Suite 200, (Brimley/Sheppard)

**Singapore Communication**
Since 1991
$40/350 min + Unlimited incoming local calling
$50/500 min + Unlimited incoming local calling
$75/750 min + Unlimited incoming local calling
**Option E & W calling , Free phone $20, $30 Packages also available
For More Info Please Visit to the Store
*** Offer Ends Without Notice*****
More Info. Call: 416-740-5292
5010 Steeles Ave. W., Unit 17 ABC
(Kipling & Steeles)

**துரித பணமாற்றுச் சேவை**



வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
**மு. காசிப்பிள்ளை & சன்ஸ்**
416.267.8221

" Making Dreams Reality "



HomeLife GTA Realty Inc., Brokerage *
Ravi R. Raveendran BSc.(Eng)
Sales Representative
416-817-8479
Bus: 416-321-6969
1711 McCowan Rd. Suite #206, Toronto
• INDEPENDENTLY OWNED AND OPERATED



RAJ
A. Rasaratnam
B.Com(Hons) - Sales Rep
416-726-8055
1st PRIZE
HomeLife/GTA Realty Inc. Brokerage*
Bus: 416-321-6969
#206 - 1711 McCowan Rd.,
Scarborough, ON.
*Independently owned and operated

THINKING OF BUYING / SELLING



HomeLife GTA Realty Inc., Brokerage *
Jeyanthi Sritharan
Sales Representative
416-918-5872
Bus: 416-321-6969
1711 McCowan Rd. Suite #206, Toronto
• INDEPENDENTLY OWNED AND OPERATED

**வீடு வாங்க, விற்க...**
ரவி பரமு
வீட்டுப் பிரதிநிதி



DIRECT: 416.262.4176
OFFICE: 416.321.6969
HomeLife GTA Realty Inc., Brokerage*
1711 McCowan Rd.
Suite #206, Toronto
• INDEPENDENTLY OWNED AND OPERATED

# தமிழ் இனமே எண்ணிப்பார்

கனடா, லண்டனில் வந்து குடிஅமர்ந்து இருக்கும் முதியவர்களுக்கு, குழந்தைகளுக்கு உடலிற் கோளாறு என்றால் உண்பது சரியில்லை ஏதோ பற்றாக்குறை என்றுதான் பொருள். இங்கு வந்தும் நம்நாட்டு பழக்கவழக்கங்களை முற்றாக மாற்றிக்கொள்ள விரும்புவது இல்லை. நீங்கள் உண்ணும் உணவுதான் உங்கள் உடம்பாகிறது. நமது உணவுப் பழக்கத்தில் மாறுதல் செய்யவேண்டும். மன அழுத்தத்தில் இருந்தும், மனக்குழப்பத்தில் இருந்தும் விடுபடுவதற்குரிய எளிய வழி, நம் வாழ்க்கை முறையில் சில மாற்றங்கள் அதிலும் உண்ணும் உணவுவகையில் மாற்றம் வேண்டும்.

ஜப்பானியர் முன்பெல்லாம் எம்மைவிட கட்டையர், குள்ளமானவர். இந்தத் தலைமுறையினர் நாலு அங்குலம் உயரம் கூடவாக வளர்ந்திருக்கிறார்கள் என்று பத்திரிகையில் படித்தேன். நான் அதிர்ச்சியடைந்தேன். எங்கள் உணவைப்பற்றியது உடலைப்பற்றியது மனவளர்ச்சியைப் பற்றிய கவலைதான் அது. தமிழ் இனம் புத்திசாலிகள் என்று மற்ற இனம் பாராட்டுகிறது. நாம் செய்யும் பல காரியங்களைப் பார்க்கும் போது, நாம் உண்மையிலேயே புத்திசாலிகள் தானா என்ற சந்தேகம் என்னுள் எழுகிறது. புத்திசாலித்தனம் என்பது என்ன அறிவைப் பயன்படுத்தும் திறன் அது.

மேலும் ஜப்பானைப்பற்றி எழுதும் போது அன்றாடம் உண்ணும் உணவில் பலவித சத்துப் பொருள்களைச் சேர்க்கின்றனர். உடல்வளர்ச்சிக்கு மிகத் தேவையான 'லைசின்' என்ற பொருளை சேர்க்கிறார்கள். புரதச்சத்துகளான இறைச்சி, மீன், முட்டை, பருப்பு, சோயாவகை எல்லாம். இறைச்சியில் கொழுப்பை அகற்ற வேண்டும். கோழி, மீன் முக்கியம். கொழுப்பு, உணவை கூடுமான-வரை குறைக்க வேண்டும். அவைதான் இதயவருத்தம், நீரிழிவு முதலான கொடிய வியாதிகளுக்கு காரணம். தாதுக்கள் என்று கூறும் உடம்புக்கு சக்தி கொடுப்பவை. சோறு, பாண், மாபண்டங்கள் குறைவாக உண்ண வேண்டும். இரத்த அழுத்தம் மற்றும் கொலஸ்ரோல் உள்ளவர்களுக்கு நெய் போன்ற கொழுப்புப்பொருள்கள் எதிரி.



புத்திசாலிகளான நாம் வெறும் மாப்பொருளான அரிசிச்சோற்றை சாப்பிட்டுக்கொண்டு இருக்கிறோம். இங்கே வறுமை பிரச்சினையல்ல. இருப்பதை சரியானபடி உபயோகிக்கிறோமா என்னும் கேள்விதான் இது. தமிழீழத்தில் வன்னிப் பகுதியில் கூடுதலான விளைவு நெல்லுதானே. அதுவும் இல்லை என்றால் எண்ணிப்பாருங்கள். போதாக்குறைக்கு சிங்களவரின் போர்க்கொடுமைகளால் பொருள் பண்டமோ போய் வாங்கவும் முடியாது. பச்சிளங்குழந்தைகள் ஏன் படிக்கும் மாணவர்களின் உலர்ந்த உடலையும் வீங்கிய தலையையும் தானே காணலாம். வெளிநாடுகளைத்தானே, எங்கள் கைகளைத்தானே பார்த்துக் கொண்டு இருப்பார்கள். எமது தாயக மக்களுக்கு நல்ல புரதச்சத்துள்ள, விற்றமின், தாதுப்பொருள் உள்ள உணவுகளுக்கும் நாங்கள் தானே வழிவகை காண வேண்டும்.

நாம் கல்வி கற்கும் போது உணவில் எவ்வளவு புரதம், தாதுப்பொருள், காய்கறிகள் இருக்க வேண்டும் என்றெல்லாம் தெளிவாகப் படித்திருக்கிறோம். அதுபற்றி எங்களால் கேள்விகளுக்குப் பதில் சொல்லமுடியும். பரீட்சை எழுதித்தேறமுடியும். ஆனால் சாப்பிடும் வேளை வந்துவிட்டால் சம உணவுக்கும், சமயல் அறைக்கும், நமது படிப்பிற்கும் நமது நடைமுறைக்கும் சம்பந்தம் இருப்பதில்லை. உருசியாய்ச் சாப்பிடுகிறோம் அவ்வளவு தான். உடலில் கொழுப்பைச் சேர்க்கிறோம். வெறும் ஊளைச் சதையை வளர்க்கிறோம். கோகோ கோலா என்று ஃபன்ரா என்று வாறவர் போறவர்க்கு கௌரவத்தை முன்வைத்து உணவுசத்தை பின் வைத்து குடிக்கக் கொடுப்போம். எப்படி நமது மக்கள் கௌரவத்தை முன்வைத்து உணவு சத்தை பின்வைத்து விடயங்களை அணுகுகிறார்கள். ஏன் நம் பெண்கள் உடல் நிலையைப் பற்றியும் நாம் கவனம் எடுக்கவேண்டும். நாங்கள் வெறும் அரிசிச்சாதத்தையும், வெந்தகாய்கறிகளையும் சாப்பிட்டுக்கொண்டு கோகோகோலாவை குடித்துக்கொண்டு நெய்யினால் உடலில் கொழுப்பையும் சதையையும் வளர்த்துவிட்டால் போதுமா? நாம் உணவில் உள்ள சத்துக்களையும் அவற்றின் பலனையும் அலசுவதில்லை. நோய் வந்தால் நாம் மருத்துவமனைக்கு நடக்கும் நடை மிக அதிகம். ஊரில் டாக்ரர் வீட்டிற்கு போய்வந்தேன். ஊசிபோட்டுக் கொண்டேன் என்று பெருமையுடன் பேசும் பெரியவர்கள் இருக்கிறார்கள். நமது மனோபாவம் ஆரோக்கியமானதல்ல பின் உடலில் எப்படி சுகம் வரும்.

உணவில் பசுமைப்புரட்சி செய்யுங்கள். பலவித நிறமுள்ள காய்கறிகளை உணவில் சேர்த்துக்கொள்ளுங்கள். ஒவ்வொரு காய்கறியும் ஒரு உயிர்ச்சத்து (விட்டமின்) மாத்திரை என்று எண்ணுங்கள். பச்சை நிற காய்கறியில் இரும்புச்சத்து அதிகம். மஞ்சள் நிற காய்கறியில் விட்டமின் Aயும் Cயும் அதிகம். பழங்களில் விற்றமினும் மினரலும் அதிகம்.

**'நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்'.**

# பிரணாயாமம்





## ஆரோக்கிய வாழ்வு

**N. செல்வசோதி**

1. சரீரம் முழுமைக்குமான சீரான இரத்த ஓட்ட விருத்திக்கு ஆசனங்கள் உதவுகின்றன. மிக முக்கியமாக தலை, வயிறு, கை, கால் பகுதிகளுக்கு ஆகும்.

2. கை, கால்களுக்கான இரத்த ஓட்டம், அபிவிருத்தியடைகிறது. இரத்த நாளங்கள், நுரையீரல், நரம்புகள், மற்ற அனைத்து உறுப்புகளையும் சீராக இயங்க வைக்கிறது. ஆசனங்களின் மூலம் இரத்தம் சீராக உடலின் அனைத்து பகுதிகளையும் அடைவதால், உடலின் சக்தி, முழுமையாக உபயோகப்படுத்தப்படுகிறது. நோய்களை எதிர்க்கும் சக்தியையும் பிரணனையும் அபிவிருத்தியடையச் செய்கின்றன.

3. பிரணாயாமாம் நுரையீரலை மிகச் சீராக விரிவடைய உதவுவதால், உடலின் பிற உறுப்புகளில் சுரக்கும் சக்தி சுரப்பிகள் சிறுநீரகம், வயிறு, கல்லீரல், மண்ணீரல், சிறுகுடல், பெருங்குடல், தோல் பகுதிகள் மற்றும் தலை உச்சிவரை பரவச் செய்கின்றன.

4. நுரையீரல் மற்றும் இரத்தத்தில் உள்ள கரியமில வாயுவைக் களைவதோடு மற்ற தேவையற்ற அமில வாயுவினை நமது உடலோடு அண்டவிடாது பார்த்துக் கொள்கின்றன. அதற்கு நமது நுரையீரல் மிகவும் தூய்மையாகவும் மற்ற நோய்களுக்கு இடம் தராமலும் இருக்க இரத்த ஓட்டம் பிராணாயாமம் உதவுகிறது.

5. கல்லீரல் உடலில் உள்ள, கழிவுகளை வேதியில் முறையில் மாற்றம் செய்து மலமாகவும், சிறுநீராகவும் கொண்டு செல்கிறது. இதற்கு இருதயத்திலும், வயிற்றிலும், சிறுகுடலிலும் உள்ள விஷத்தன்மையையும் பூஞ்சை பொருட்களையும் கல்லீரலுக்கு கொண்டு செல்ல வேண்டும். இத்தனை நடைமுறைகளையும் செயல்படுத்தி ஊக்குவிக்க பிரணாயாமம் உதவுகிறது.

6. பிரணாயாமத்தின் போது உதரவிதானம், வயிற்றுச் சதைகள் சீராக தாளலயத்துடன் உபயோகிக்கப்படுவதால் குடலின் பணிகளை சீராக்க இது உதவுகிறது. இதனால் குடல்கள் உணவை கிரகிக்கவும், எஞ்சியவைகளை வெளியேற்றவும் ஏதுவாகிறது.

7. பிரணாயாமத்தினால் மண்ணீரலின் இயக்கம் சீராக்கப்படுவதால் இரத்தத்திலிருந்து இறந்த, உபயோகமற்ற சிவப்பணுக்களை பிரிக்க முடிகிறது..

8. பிரணாயாமத்தினால் இரத்தச் சுத்திகரிப்பு சீராக்கப்படுவதால் மூளை, முதுகுத்தண்டுவடம், நரம்பு மண்டலம் முதலியவற்றின் இயக்க ஆற்றல் அதிகரிக்கப்படுகிறது.

9. பிரணாயாமத்தினால் வியர்வை நாளங்கள் சீராக்கப்படுவதால் அவை சிறுநீரகத்தின் பணியை பகிர்ந்து கொள்கிறது.

10. இவ்வளவு சிறப்பு மிக்க பிராணாயாமத்தினை முறையாக செய்யாவிடில், ஆஸ்துமா, இருமல், இரத்த உயர் அழுத்தம், இதயத்தில் வலி, நாக்கு உலர்தல் போன்ற விளைவுகள் ஏற்படும்.

11. பிரணாயாமம் நாடிகளையும், உள் உறுப்புகள் மற்றும் திசுக்களையும் பாதுகாத்து, லாக்டிக் அமிலத்தை நடுநிலைப்படுத்துவதால், சோர்விலிருந்து சீக்கிரத்தில் விடுபடமுடியும்.

12. பிரணாயாமம் ஜீரணசக்தி, ஞாபகசக்தி, உற்சாகம், எண்ணம் முதலியவற்றை அதிகரிக்கிறது. தூய்மைப்படுத்துகிறது. மனத்தை உடலாதிகத்திலிருந்து விடுவித்து, புத்திக்கூர்மையை அதிகரிக்கிறது.

13. பிரணாயாமம் சிந்தனையைக் கட்டுப்படுத்துவதால் மனம் நிர்விசய நிலையை

*தொடர்ச்சி 04ஆம் பக்கம்*

விளம்பரம் VLAMBARAM™

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்க்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram, P.O. Box 37527, 31 Tapscott Road, Toronto, ON M1B 5P9, Canada
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com

HOME INSPECTION
• வீடு தரமானது என உறுதிப்படுத்திக் கொள்ள... • வீடு பராமரிப்பு பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ள...
ந. தயாபரன்
Certified Inspection Specialist
Expert Building Inspections LTD.
• Exceed the Standards • Industry Canada Registered • Professionals Serving the GTA • On site Report
24 /7 - Toll Free - 1.866.373.3315 416.727.8336

# மருத்துவ பரிசோதனைகள் எதுவும் கருத்தில் கொள்ளப்படாத ஆயுள் காப்புறுதி

## Non Medical Life Insurance

கனடாவின் ஆங்கில தொடர்பு சாதனங்களில் ஆயுள் காப்புறுதி தொடர்பாக ஒரு விளம்பரம் கவர்ச்சியாக ஓடி கொண்டேயிருக்கும்.

- "No Medicals"
- "No Questions"
- Buy Life Insurance Quickly

"மருத்துவ பரிசோதனைகள், புலனாய்வுகள் எதுவுமே இல்லாது ஆயுள் காப்புறுதி செய்ய வேண்டுமா?"

என்ற இந்த கவர்ச்சியான விளம்பரத்தினை பார்த்தவுடன் மரணப்படுக்கையில் இருக்கும் ஒவ்வொருவரும் உடனடியாக அவசரமாக ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் செய்து விட்டால் அது குடும்பத்தினருக்கும், வாரிசுகளுக்கும் ஒரு திரண்ட முதலீடாக இருக்கும் எனத்தோன்றும். இன்னும் ஒருபடி மேலே போய் மருத்துவ பரிசோதனைகள் எதுவுமே இல்லாத ஆயுள் காப்புறுதி செய்யும் வசதிகள் இருக்கும் இந்த காலத்தில் ஏன் இந்த ஏராளமான பரிசோதனைகள் என்ற கேள்வியும் பலருக்கும் அவர்களின் மனதில் எழுவது வழமையாகும்.

அந்தக்கேள்வி உண்மையானதுவே!

இங்கு மருத்துவ, உடல்நிலைமை காரணமாக ஆயுள் காப்புறுதி செய்ய முடியாத முதியவர்கள் பலருக்கும் ஆயுள் காப்புறுதியில் ஒருபாதை திறக்கப்பட்டுள்ளது. பொதுவாக ஆயுள் காப்புறுதி ஒன்றுக்கு ஒரு முகவர் ஊடாக விண்ணப்பிக்கும்போது, காப்புறுதி செய்து கொள்பவரின் உடல் நிலைமைகள், ஆரோக்கியமான மருத்துவ வரலாறுகள் மட்டுமல்ல மேலதிகமாக

- குற்றவியல் புலனாய்வுகள் (Criminal Records)
- குடியுரிமை அந்தஸ்துகள் (Immigration Status)
- வாகனமோட்டும் போது பெற்ற தண்டனை ரிக்கற்றுகள் (Traffic Law Violations)
- வருமானம் & தேறிய சொத்து (Income & Net worth)
- எதற்காக இப்பெருந்தொகை என்ற கேள்வி (Purpose of this Coverage)

இப்படி ஒன்றல்ல, இரண்டல்ல, ஏராளமான கேள்விகளுக்கு பதில் வழங்க வேண்டும். மதுபோதையில் வாகனம் செலுத்தி பிடிபட்டு, சாரதி அனுமதி பத்திரத்தினை பறி கொடுத்திருந் தால் அதற்கு மேலதிகமாக இன்னொரு விசேட புலனாய்வு இவ்விசாரணைகளில் எல்லாம் சாதக-மாக இருந்தால் ஆயுள் காப்புறுதியில் விண்ணப்பம் ஏற்று கொள்ளும் நிலைமையும், பல விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்ட சந்தர்ப்பங்களும் ஏராளம் என்பது எங்களின் பல வருடங்கள் கனடாவின் இக் காப்புறுதி தொழில் அனுபவங்களில் கண்ட உண்மைகள். சில நேரங்களில் சாதாரண கட்டணத்தினை விட அதிகமான கட்டணத்தில் விண்ணப்பம் ஏற்று கொள்ளப்படும். விண்ணப்பம் ஒன்று முன்எடுத்து செல்லும்போது ஒரு கம்பனியின் எதிர்மறையான முடிவு எதுவோ அதுகால ஓட்டங்களில் இன்னொரு கம்பனிக்கு விண்ணப்பிக்கும்போதும் ஒரு சிவப்புக் கோடாகவே காட்டும். எனவே தான் ஆரோக்கியமாக இருக்கும்போதே ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தில் சேர்ந்து கொள்ளுங்கள். குறைந்த வயதுகளில் கட்டணங்களும் குறைவாக இருக்கும் என ஆலோசனைகள் குறிப்பிடுவது வழமையாகும்.

ஆனால் இங்கு மருத்துவ புலனாய்வுகள், பரிசோதனைகள் எதுவும் இல்லாத ஆயுள் காப்புறுதி (Non Medical Insurance) என்பது மேற்குறிப்பிட்ட நிலைமைகளில் இருந்து மாறுபட்டாலும், வயோதிபர்கள், நோய்வாய்பட்டவர்கள் என்ற நிலைமையில் இருப்பவர்கள், தங்களின் இறுதிக்கால மரண செலவுகள் போன்றவற்றினை இன்னொருவரிடம் கடமை படவிடாது காப்புறுதி கம்பனிகளின் கையில் ஒப்படைத்து விட்டு கண்ணை மூட வேண்டும் என விரும்புவர்கள் சேர்ந்து கொள்ளும் ஒரு சந்தர்ப்பமாக இக்காப்புறுதி ஒப்பந்தத்தினை கருத்தில் கொள்ளலாம்.

ஆனால்..... இங்கு மாதா மாதம் செலுத்தும் விலை என்பது சாதாரணமாக உடல் ஆரோக்கியமான நிலைமையில் நின்று சேர்ந்து கொள்ளும் ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தினை விட கொஞ்சம் அதிகமாகவே இருக்கும்.

இதிலும் ஏற்று கொள்வதற்கு சற்று தளர்வு நிலையில் உள்ள நிபந்தனைகள் உண்டு. அவையாவன பின்வருமாறு!

Within the past three years have you had or been treated for (கடந்த மூன்று வருடங்களில் பின்வரும் நோய்களில் ஏதாவது ஒன்றிற்கு உட்பட்டீர்களா?)


சிவ. பஞ்சலிங்கம் B. Com,

(Licensed Insurance Broker)

காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:

416.321.0999


1. Heart Failure or Peripheral Vascular Disease?
2. Cancer or Malignant Tumour? (புற்று நோய் அல்லது உயிருக்கு ஆபத்தான கட்டிகள் ஏதாவது உள்ளதா?)
3. Unusual Chronic Infection or Immune system abnormality including Hiv / Aids? (வழமைக்கு அப்பாற்பட்ட தொடர்ச்சியான தொற்றுநோய் அல்லது எய்ட்ஸ் உட்பட நுண்ணுயிர் எதிர்ப்பு சக்தியற்ற நிலைமை.)
4. An incurable Terminal Illness? (மாற்ற முடியாத மரணத்தினை எதிர்கொள்ளும் நோய் உள்ளதா?)
5. Organ Transplant? (உடல் உறுப்புகள் ஏதாவது புதிதாக மாற்றி உருவாக்கப்பட்டதா?)

இந்த கேள்விகளுக்கு "ஆம்" என்றால் இந்த மருத்துவ புலனாய்வுகள் இல்லாத காப்புறுதி ஒப்பந்தமும் நிராகரிக்கப்பட்டு விடும் (கடந்த மூன்று வருடங்களில் என்பதே இங்கு கேள்வி)

மேற்குறிப்பிட்ட கேள்விகளில் இருந்து ஒரு முடிவு உறுதியாக தெரிவது யாதெனில் உடல் நோயின் கடுமையான தன்மை என்பது கடந்த மூன்று வருடங்களில் மேற்குறிப்பிட்ட நிலைமையில் இருந்தால் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவது தவிர்க்க முடியாததாகி இம்மருத்துவ புலனாய்வுகள் இல்லாத காப்புறுதி ஒப்பந்தங்களில் கூட சேர முடியாத நிலைமை ஏற்படுகின்றது. ஆனால் இத்தகைய நிலைமையில் இருப்பவர் மூன்று வருடங்களின் பின்பு சேர்ந்து கொள்ளலாம்.

25 - 80 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் சேர்ந்து கொள்ளும் இவ் ஒப்பந்தத்தில் இருவகையான ஒப்பந்தங்கள் உண்டு. அவையாவன

### 1. Deferred Non - Medical Life Insurance

- இருதய நோய் (hart attack)
- பாரிச வாதம் (Stroke)
- தொடர்ச்சியான சிறுநீரக கோளாறு (Chronic Kidney Disease)
- தொடர்ச்சியான கல்லீரல் நோய் (Chronic Liver Disease)
- சிலவகையான நரம்பியல் நோய்கள் (Alzheimer's Disease Multiyle Sclerosis)
- மோசமான மதுபானம், போதை வஸ்துகளுக்கு உட்பட்டவர்கள்
- இன்சுலீன் மருந்து ஏற்றும் நீரிழிவு நோய்களுக்கு உட்பட்டவர்கள்
- குருதி சம்பந்தப்பட்ட நோய்களுக்கு உட்பட்டவர்கள்
- கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு இரத்த அழுத்த நோய்களுக்கு உட்பட்டவர்கள்
- சுவாசம் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு உட்பட்டு ஒட்சிசன் சிலிண்டர்களை கையுடன் வைத்திருப்பவர்கள்
- இரண்டு வருடத்தினுள் ஏனைய காப்புறுதி கம்பனிகளினால் விண்ணப்ப மனு நிராகரிக்கப்பட்டவர்கள்

மேற்குறிப்பிட்ட வகைக்குள் உட்பட்டவர்கள் இத்திட்டத்தில் சேர்ந்து கொள்ளலாம்.

**ஆனால் இங்கு ஒரு முக்கியமான நிபந்தனை**

ஒப்பந்தத்தில் சேர்ந்து முதல் இரு வருடங்களினுள் உயிர் இழப்பு நடந்தால் (விபத்தில் ஏற்படும் உயிர் இழப்பு விதி விலக்கு) செலுத்திய பணம் மட்டும் மூன்று வீத வட்டியுடன் திருப்பி வழங்கப்படுமே தவிர காப்புறுதி ஒப்பந்த தொகை வழங்கப்பட மாட்டாது என்பது இங்கு கருத்தில் கொள்ளப்பட வேண்டிய முக்கியமான விடயமாகும். ஒப்பந்தத்தில் சேர்ந்து இரு வருடங்களின் பின்பு உயிர் இழப்பு நடந்தால் மட்டுமே ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட தொகை குடும்பத்தவர்களுக்கு கிடைக்கும்.

சரி இதில் உள்ள இரண்டாவது அதாவது சற்று சாதகமான திட்டத்திற்கு வருவோம்.


### 2. Simplified Non Medical Life Insurance

இத்திட்டத்தில் $50,000 டொலர் வரை ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். ஒருவரின் உயரத்திற்கு ஏற்ப உடலின் எடை இருக்குமானால் $75,000 டொலர் வரை ஒப்பந்தம் செய்யலாம். ஒப்பந்தத்தில் சேர்ந்து மறுநாள் உயிர் இழப்பு நடந்தாலும் குடும்பத்தவர்களுக்கு சாதாரண ஆயுள் காப்புறுதி போல முழுத்தொகையும் கிடைக்கும்.

மேலே "Deferred Non Medical Life Insurance" என்னும் தலைப்பில் முதலாவது வகை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட கடுமையான நோய்களுக்கு உட்படாது சாதாரண நோய்களினால் வழமையான சாதாரண ஆயுள் காப்புறுதி திட்டத்தில் சேரமுடியாத நிலைமைக்கு உள்ளாக்கப்பட்டவர்கள் இத்திட்டத்தில் சேர்ந்து கொள்ளப்படுவார்கள்.

மேற்குறிப்பிட்ட மருத்துவ புலனாய்வுகளில் நிபந்தனைகள் தளர்த்தப்பட்ட இருவகையான திட்டங்கள் தவிர மேலதிகமாக மரணத்தின் இறுதி கட்டத்திற்கு செல்லும் நிலைமையில் இருப்பவர்கள் உயிர் இழப்பிற்கு முன்னரே காப்புறுதி தொகையில் 25% வீதம் பெற்று கொள்வதுடன், சொந்த இடத்தில் இருந்து 200கி. மீ உள்ளே உயிர் இழப்பு நடந்தால் பூதவுடலை சொந்த இடத்திற்கு கொண்டு வருவதற்கான செலவாக $2000 டொலரினை கம்பனி வழங்கும்.

சரி! இங்கு குறிப்பிடப்பட்ட மருத்துவ புலனாய்வுகள் எதுவுமேயில்லாத இவ் ஆயுள் காப்புறுதி திட்டத்தில் விலைகள் என்பது எப்படியிருக்கும்? என்பதுவே அடுத்த முக்கியமான கேள்வியாகும்.



உடல் ஆரோக்கியமான நிலைமையில் இருந்து பூரணமான மருத்துவ புலனாய்வுகளுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்திற்கும் இம் மருத்துவ புலனாய்வுகள் இல்லாது செய்து கொள்ளும் ஒப்பந்தத்திற்கும் விலைகளில் உள்ள வித்தியாசங்களை இங்கு பாருங்கள். உதாரணமாக

**காப்புறுதி தொகை $25,000 டொலர் புகை பிடிக்காதவர்**

| காப்புறுதி செய்வோரின் வயது | ஆண்/பெண் விவரம் | மருத்துவ புலனாய்வுகளுடன் ஆரோக்கியமான நிலையில் காப்புறுதி செய்யும்போது விலை | மருத்துவப்புலனாய்வு இல்லாது ஆயுள்காப்புறுதி செய்யும் போது விலை |
|---|---|---|---|
| 60வயது | ஆண் | $61.99 | $92.25 மாதம் |
| | பெண் | $50.00 | $75.37 மாதம் |
| 65வயது | ஆண் | $83.93 | $128.00 மாதம் |
| | பெண் | $67.61 | $102.33 மாதம் |
| 70வயது | ஆண் | $113.53 | $184.88 மாதம் |
| | பெண் | $88.53 | $142.49 மாதம் |
| 75வயது | ஆண் | $154.60 | $262.55 மாதம் |
| | பெண் | $120.16 | $198.18 மாதம் |
| 80வயது | ஆண் | $230.11 | $371.40 மாதம் |
| | பெண் | $184.95 | $289.12 மாதம் |


APPLEMORE AUTOMOTIVE

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL


# பிரணாயாமம்

*02ஆம் பக்கத்தொடர்ச்சி*

அடைகிறது.

14. அனைத்திற்கும் பயிற்சியே பிரதானம். தினப் பயிற்சி மரண பயத்தினின்று விடுவித்து, வெற்றியைத் தரும்.

15. பிரணாயாமத்தினை பத்மாசனத்தில் அமர்ந்து செய்யும் போது செய்பவர் விடுவிக்கப்பட்ட மனநிலையை அடைவதால், எதிர்கால பயமும், இறந்த கால நினைவும் இன்றி நிகழ் காலத்தில் மட்டும் சஞ்சரிக்க முடிகிறது.

16. காற்று புகையையும், அசுத்தங்களையும் விரட்டி எரித்து வளிமண்டலத் தூய்மையை பாதுகாப்பது போல் பிரணாயாமம் என்ற புனித ஆன்மா, நினைவு, எண்ணம் முதலியவற்றை சுத்திகரிக்கிறது.

17. உதிக்கும் சூரியன் இருளை விரட்டுவது போல் பிரணாயாமம் உடலையும், மனதையும் ஒருநிலைப்படுத்தவும் தியானிக்கவும் தயார்படுத்துகிறது.

18. பிரணாயாமம் ஒருவரின் உள்ளத்தின திறவுகோல். எனவே தான் இது மாதவமாகவும், உண்மையான சுய அறிவின் பிரதிபலிப்பாகவும் கருதப்படுகிறது.



## குப்பிளான் விக்கினேஸ்வரா மக்கள் மன்றம் (கனடா கிளை) நடத்தும்

## கோடைகால ஒன்று கூடல் & விளையாட்டு போட்டிகள்

**காலம்:** ஒகஸ்ட் 05, 2006 சனிக்கிழமை காலை ஒன்பது மணி

**இடம்:** ஸ்காபரோ மோர்னிங் சைபிட் பூங்கா மைதானம் (கடந்த வருடங்களில் நடந்த இடம்)

**முக்கிய அறிவித்தல் -** கிராமத்து மக்களுக்கு கலைவிழாவில் வெளியிடப்படும் சஞ்சிகையில் கிராமத்து வாசனையினை மையமாக வைத்து, சஞ்சிகை, கவிதை எழுத விரும்புவோர் கலைவிழாவில் பங்குபற்ற விரும்புவோர் ஆங்கிலம் தமிழ் மொழி போட்டிகளில் பங்கு பற்ற விரும்பும் சிறார்கள் யாவரும் ஒகஸ்ட் 05, 2006 க்கு முதல் (இறுதி திகதி) தங்கள் பெயர் விவரங்களை பதிவு செய்யவும்.

## "செம்மண் இரவு" கலைவிழா

**காலம்:** ஒகஸ்ட் 26. 2006 சனிக்கிழமை மாலை ஐந்து மணி

**இடம்:** கனடா கந்தசுவாமி கோவில், 733, பேர்ச்மவுண்ற் வீதி, ஸ்காபரோ

**தொடர்புகளுக்கு:** மதி- 416.889.2254 சக்தி- 416.839.7258 அப்பன்- 416.280.5523

## கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா 13ஆவது வெளிக்கள விருந்து - 2006

எமது சங்கத்தால் வருடாந்தம் நடத்தப்பட்டுவரும் வெளிக்கள விருந்து இவ்வாண்டும் நடைபெற உள்ளது.

இடம் - Kids Town Park - Birchmount & Mcnicoll
காலம்- ஒகஸ்ட் 05, 2006 - சனிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 6:00மணிவரை நடைபெறும்.

இந்நிகழ்ச்சிகள் யாவும் சிறுவர் முதல் முதியோர்வரை பங்குபற்றும் வண்ணம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதால் எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியர்கள் பழைய மாணவர்கள் மற்றும் அவர்களது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பாடசாலையின் நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்

## வியாபாரிமூலை நெல்லண்டை மக்களின் ஒன்றுகூடல்


வியாபாரிமூலை நெல்லண்டை மக்களின் ஏழாவது ஒன்றுகூடல் ஆவணிமாதம் ஆறாம் திகதி ஞாயிற்றுக்கிழமை மிலிக்கன் பாக்கில் ஏரியா C இல் காலை 10.30மணிக்கு ஆரம்பமாகும். கனடா வாழ் வியாபாரிமூலை நெல்லண்டை மக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்படுகிறார்கள்.

தொடர்புகட்கு - 416.391.3237 416.335.8967
416.282.3584 416.492.2097


ஸ்ரீ சத்ய சாயிபாபா மார்க்கம் அன் கிங்ஸ்ரன் பாபா சமித்தியினர் மார்க்கம் அன் கிங்ஸ்ரன் சந்திப்பில் அமைந்துள்ள ஸ்காபரோ கொமியூனிற்றி சென்ரர் மண்டபத்தில் புதிதாக சிறுவர்களுக்கான ஆன்மீக வகுப்புக்களை (பாலவிகாஸ்) ஆரம்பித்துள்ளார்கள். கடந்த இரண்டாம் திகதி யூலை 02, 2006 ஆண்டு ஞாயிற்றுக்கிழமை இவ்வகுப்புக்கள் ரொறொன்ரோ பிராந்தியம் இரண்டு தொடர்பதிகாரி திரு. துரைராசா அவர்களினால் முறைப்படி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இவ்வகுப்புக்கள் ஒவ்வொரு ஞாயிறு காலை 11.00 மணிமுதல் மதியம் 12.30 மணி வரையும் இடம் பெறும். வகுப்புக்களை ஆசிரியை திருமதி சபா நடேசன் அவர்கள் நடத்துவார்கள்.

தொடர்புகளுக்கு: திரு. கோபால் (தலைவர்) 416.265.9477, 416.269.1612, 416.439.0505



JUSTIN WILLIAM* 416-803-7344


SASI CHELVARATNAM* 416-725-1125


BALAN KANESAPILLAI* 416-844-5401


JAYANTHYI SRITHARAN* 416-918-5872


VASANTHY NIRANJAN* 416-845-8272


RAVI PARAMU* 416-262-4176


RAVI RAVEENDRAN* 416-817-8479


RAJ .A . RASARATNAM* 416-726-8055


SHIVA MANIAM* 416-727-5052


MORRISON SAVERMUTTHU* 416-220-3050



SEELAN SIVA AIYADURAI* 416-451-0271


KETHEES SEEVARATNAM* 416-275-5788


SHAN THAYAPARAN* 416-567-7675


KUMAR SINNATHAMBY* 416-576-4357


THANA SUSEENDRA* 416-893-4376


PARAM. G GNANASWARAN** 416-230-1107


SHIVA SHARMAH* 416-666-5515

எம்மிடம் வீடு வாங்கும், விற்கும், அல்லது முதலீடு செய்வதன் மூலம் பின்வரும் பரிசுகளை வெல்லுங்கள்*




Call the real REAL TEAM

7 Consolation Prizes
3 Digital cameras, 3 BBQ Machines, 1 Bicycle

சீட்டிழுப்பு ஜனவரி 2007 இல் நடைபெறும்

*Now Serving in two locations*

**HOMELIFE/GTA Realty Inc.** Brokerage

1711 McCowan Rd., Suite 206, Toronto, ON M1S 3Y3 (HWY 401 & McCowan Rd.) 416.321.6969

145 Traders Blvd. E., #28 Mississauga, ON L4Z 3L3 (HWY 401 & HWY 10) 905.712.2666

*Sales Representative **Broker

* Some conditions may apply, Vehilcle may not be as illustrated

# இவர் தமிழ் நாட்டுத் தமிழர் அல்ல

தமிழ் நாட்டுச் சூழலின் சங்கிலிகளை அறுத்துக் கொண்டு வெளிநாட்டில் வாழும் தமிழர்களால், அல்லது புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்களால். மலேசியாவிலிருந்தோ, கனடாவிலிருந்தோ அல்லது அமெரிக்காவிலிருந்தோ சில நல்ல விடயங்கள் தமிழில் நடந்து விடுகின்றன. தமிழ் நாட்டுத் தமிழரால் அல்ல. தமிழ்ச் சூழல் அப்படியெல்லாம் ஒன்றும் அவர்களை உருப்பட விட்டுவிடாது. சமீபத்தில் நடந்துள்ள நல்ல விடயங்களில் ஒன்று இணையம் மூலம் தமிழ் கூறும் நல்லுலகை ஒரு குடைக்கீழ் ஒன்றுபடுத்தியிருப்பது.

இணையம் என்ற ஒன்று இல்லையெனில், அதிலேயே தன் குரலைப் பதிவு செய்து வரும் பி.கே சிவகுமார் என்ன செய்திருப்பார்? அவர் குரலை தமிழ் நாட்டு ஊடகங்கள் மூலம் கேட்டிருக்க முடியுமா? இங்கிருக்கும் குழுக்கள் ஒன்றில் அவர் தன்னை இணைத்துக் கொண்டிருப்பாரா, எந்த குழுவும் அவரை ஏற்றிருக்குமா? சந்தேகம் தான். அனேகமாக அவர் தம் அலுவலகத்திற்கும் வீட்டிற்குமாக பந்தாடப்பட்டிருப்பார். தன் வீட்டு அலமாரிப் புத்தகங்களுடனேயே அவர் உலகம் வேலியிடப்பட்டிருக்கும்.

இணையத்தில் பதிவான அவரது கட்டுரைகள் அட்லாண்டிக்குக்கு அப்பால் என்று தொகுக்கப்பட்டுள்ளது. புத்தகமாக வந்த பிறகு தான் பி.கே. சிவகுமாருடன் எனக்கு பரிச்சமாகிறது. இணையத்தில் படித்ததில்லை. என்னுடைய சிரமங்களும் படிந்துவிட்ட பழக்கங்களும் எனக்கு. பழங்காலத்து மன அமைப்பு. இப்போது இத்தொகுப்பு பரிச்சயப்படுத்தும் சிவகுமார் என்னையும் அவரையும் பிரிக்கும் ஒரு தலைமுறைக்கும் மேலான இடைவெளியையும் மீறி ஒரு இதமான சினேகபூர்வமான மனிதராக அருகில் உணர வைக்கிறது. தமிழ்ச் சூழல் அவரைக் கெடுத்து விட வில்லை. அமெரிக்கா அவரது ஆளுமையை தமிழரல்லாது வேறேதாவதாகவும் ஆக்கி விடவில்லை.

தொகுப்பில் உள்ள சிறிதும் பெரிதுமான 45 கட்டுரைகள், இலக்கியம், அரசியல், அமெரிக்க வாழ்க்கை, கவிதை, விவாதங்கள், தமக்குப் பிடித்த கவிஞர்கள், என்று பல விடயங்கள் பற்றி பேசுகின்றன. இப்படி எது பற்றிப் பேசினாலும், சிவகுமாரை மிக அருகில் அடக்கம் என்ற பாவனையின்றி அடக்கத்தோடும் தோழமையோடும் ஒருவராக உணரலாம்.

அவரது தாத்தா நீதிக்கட்சிக்காரர். திராவிட இயக்க அபிமானி. ஆனந்த போதினி பஞ்சாங்கம் வருடா வருடம் மறக்காமல் வாங்குபவர். அவரிடம் வை.மு. கோபால கிருஸ்ணமாச்சாரியார் உரை எழுதிய கம்பராமாயணம் முழுதும் அவர் வாசித்த குறிப்புகளுடன் இருந்தது. தந்தையார் தீவிர காங்கிரஸ்காரர். அமெரிக்காவிலிருக்கும் பேரன் கேட்க இரண்டே பாகங்கள் தான் அப்பாவால் அனுப்பப்படுகிறது. எல்லாவற்றையும் அனுப்பி விட்டல் தாத்தா ஞாபகத்தில் இங்கு என்ன இருக்கும் என்று சொல்கிறார் அப்பா. பேரன் அமெரிக்காவில் இருந்து கொண்டு சிவ வாக்கியர் பாடல்களிலும் கம்பனியிலும் ஆழ்கிறார். சிவ வாக்கியரின் நாஸ்திகத்திற்கும் பகுத்தறிவுப் பகலவர்களின் நாஸ்திகத்திற்கும் இடையே உள்ள குண வேற்றுமை சிவகுமாருக்குத் தெரிகிறது. திராவிடக் கட்சிகளின் பொய்மைகளை அமெரிக்காவிலிருக்கும் பேரன் உணரமுடிகிறது. தனித் தமிழின் போலித்தனமும், சங்கராச்சாரியாரின் கைது பற்றி கருணாநிதியின் சாமர்த்தியமான வார்த்தை ஜாலங்களின் சந்தர்ப்பவாத அரசியல் தெரிகிறது. தமிழக இடது சாரிகளின் அரசியலின் இரட்டை நாடகங்கள், ஜெயலலிதாவை எதிர்க்கும் தேர்தல் பிரசாரத்தில் வீரப்பனின் கருணாநிதி ஆதரவுப் பேச்சை பயன்படுத்திய சன் ரிவி, இப்படி இங்கு நடக்கும் எல்லா மாய்மாலங்களையும் மாய்மாலங்களாகவே அவரால் பார்க்க முடிகிறது.

உமா மகேஸ்வரியின் கவிதை அவரை ஈர்த்துள்ளது. தன் ரசனையை அவர் மிக விரிவாகவே எழுதியிருக்கிறார். படிமமும், உருவகமும், அனுபவத்திலிருந்து பிறப்பது எங்கு, யோசித்து அடுக்கி ஒட்டவைத்திருப்பது எங்கு என சிவகுமாருக்குத் தெரிகிறது. தமிழ் நாட்டுக் குழுச் சார்புகள், அரசியல் சார்புகள் அவரது வாசிப்பைப் பாதிக்கவில்லை. அவரது ரசனை அவரதே. இது பெரிய விடயம்.

ஜெயகாந்தனிடம் சிவகுமார் கொண்டுள்ள உணர்வை பக்தி என்று தான் சொல்ல வேண்டும். அரவிந்தன் எழுதிய விமர்சனம் சிவகுமாரை நிறைய கோபப் படுத்தியிருக்கிறது. அரவிந்தன் ஜெயகாந்தனைத் தேர்ந்தெடுத்ததும், எழுதியதும், தன்னிச்சையாக அல்லவோ, தூண்டப்பட்டோ என்ற சந்தேகம் சிவகுமாருக்கு. ஜெயகாந்தனிடமும் இரைச்சலும் உண்டு, நிசப்தங்களும் உண்டு என்பதும், பல கால கட்டங்களில், பலமுறை ஜெயகாந்தன் அசாத்திய துணிவையும், தன் கருத்து சுதந்திரத்தையும் உரத்த குரலில் வெளிக் காட்டியிருக்கிறார், என்பதும் உண்மை. அதே சமயம் கருத்துக்களையே அனுபவங்களாகவும், பாத்திரங்களாகவும், அவர் எழுத்தில் காண்பதும் உண்மை. சிவகுமாருக்கு, ஜெயகாந்தன் ஒரு நிர்மல, நிர்குண பிரும்மம். மிகுந்த சினேக பாவத்தோடு நம் அருகே குரல் எழுப்பாது உரையாடிக்கொண்டிருக்கும் சிவகுமார் மூக்கு சிவந்து உதடு துடிப்பது, ஜெயகாந்தன், நேசகுமார் இருவர் பற்றித்தான்.

நேசகுமார் விடயத்தில், நேசகுமாரின் கிண்டலுக்கும் கோபத்துக்கும் காரணிகளை மறந்து விடுகிறார். அந்த காரணிகள் நேற்று முளைத்தவையும் உண்டு. நூற்றாண்டுகள் பல நீளும் வரலாறும் உண்டு. உண்மை 7-ம் நூற்றாண்டு இறைவாக்கில் சொல்லப்பட்டு விட்டது. அதன் பிறகு முற்றுப் புள்ளி என்றால் என்ன செயவது?. இதை ஒப்புக்கொள்ளாதவர் எல்லாம் காபிர், அதற்கு அடுத்த நடவடிக்கை ஜெஹாத் தான் என்றால் என்ன செய்வது? ஸடன்னிகளுக்கு, ஸியாக்களும் காபிர், அஹ்மதியாக்களும் காபிர், முஜாஹித்துகளும் காபிர், என்றால் என்ன செய்வது? இவர்கள் எல்லோருக்கும் ஸடபிகள் காபிர் என்றால் என்ன செய்வது? ஒரு முஸ்லீம் நண்பரைக் கண்டால், "ஸாகேப்", "ஜனாபேவாலி" ஸலாம் ஆலே கும்" என்று வாழ்த்தத் தயார் நான். காலை ஒரு நாள் எம்.எஸ் சுப்புலக்சுமியின் விஸ்ணு சகஸ்ரநாமம் கேட்டால், மறு நாள் காலை அபீதா பர்வீனின் ஸடபி பாட்டுக்கள் கேட்க நான் தயார். கேட்கிறேன். விரும்பி, ரசித்துக் கேட்கிறேன். ஆனால் "அது பத்தாது, சுன்னத் பண்ணிக்கோ" என்று மிரட்டினால் என்ன செய்வது? பாரதி "அல்லா அல்லா" என்று பாடினான். எங்கள் குழந்தைகள் பள்ளியில் வந்தேமாதரம் பாடாது. அது எங்கள் மதத்திற்கு விரோதம் என்று சொல்லும் மதத்தலைவரை, அரசியல் தலைவரை, என்னென்பது?

ஆனால் சிவகுமார் கோபம் கொள்ளும் இந்த இடங்களில் எல்லாம், வகுப்பு வாத்தியாரிடம் அவன் மட்டும் என்னைச் சீண்டலாமா சார்?" என்று மூக்கு விடைக்க புகார் செய்யும் இரண்டாம் வகுப்புப் பையனாகத்தான் தோன்றுகிறார். மறுபடியும் ஒரு ஆனால்: "தமிழில் விமர்சனத்துறை வளரவே இல்லை என்று சொல்லலாம்" என்று ஒரு கட்டுரையை ஆரம்பிக்கிறார் சிவகுமார். அப்படி ஒரு பார்வை மிக உயர்ந்த தளத்தில் இருந்து பார்த்தல் சாத்தியமே. அந்த உயர்ந்த தளம் நமக்கு எல்லாம் ஒரு லட்சியமாக இருக்கவேண்டும் என்றும் நான் விரும்புவேன்.

வல்லிக்கண்ணனின் "உற்சாகப் படுத்தும்" விமரிசனம் பற்றியும். சர்வ ஜீவ தயை பாவிப்பவர் வல்லிக்கண்ணன். ஆண்டவன் படைப்பில், ஈ, கொசு, கரப்பான், பல்லி, கள்ளி கத்தாளை எல்லாமே ஜீவன்கள் தான் அவை ரக்சிக்கப்படவேண்டும் என்று நினைப்பவர் அவர். அவரது பாராட்டுக் கார்டு இல்லாமலேயே அவை உயிர் வாழும் தான். ஆனால் வைக்கோலுக்கும் சேமியாவுக்கும் வித்தியாசம் தெரியாத இரசிகரை என்ன என்று சொல்வது? எனது நண்பர் சொன்னார்: "என் கவிதைத் தொகுப்பை வல்லிக்கண்ணனுக்கும் கொடுக்கலை, தி.க.சி.க்கும் கொடுக்கலை. எதுக்குங்க? ரெண்டு கார்டு உடனே வந்துடும் பாராட்டி".

சிவகுமார் ஆனந்த போதினி பஞ்சாங்கம் பற்றிக் குறிப்பிட்டார். ஆனந்த போதினி, பாம்புப்படம் போட்ட பஞ்சாங்கங்கள் எல்லாம் complimentary copies அனுப்புவதில்லை. இல்லையெனில் அவற்றிற்கும் வல்லிக்கண்ணன் உற்காகப்படுத்தும் கார்டு அனுப்பியிருப்பார்.

சிவகுமார் தன் அமெரிக்க வாழ்க்கைக் காட்சிகளும் சில தந்துள்ளார். தான் எப்படி கால்பந்து கோச் ஆனார், தன் அலுவலகக் காண்டீன் செஃப், ஜமேய்க்காவில் இருந்து வந்தவர் எல்லோருடனும் காட்டும் அக்கறையும் அன்னியோன்னியமும், தன் குழந்தையின்

## வெங்கட் சாமிநாதன்

பிடிவாதத்தில் அவர் புரிந்து கொண்டது எல்லாவற்றையும் படிக்கும் போது, தமிழ் சமூகத்தையும், அரசியலையும், இலக்கியத்தையும் பற்றிப் பேசும் அதே சிவகுமார் என்றுதான் சொல்ல வேண்டும்.

எல்லாம் சொன்னபிறகு, நான் முதலில் சொன்னேனே, ஓர் உண்மையும், சினேக பாவமும் கொண்ட நண்பருடன் உரையாடுவது போன்ற மன நிறைவு சிவகுமாரின் புத்தகத்தில் கிடைக்கிறது என்று. அதில் மாற்றமில்லை. இடையிடையே நாம் சொல்ல மாட்டோமா, "இல்லீங்க நீங்க தெரியாம பேசறீங்க. வெளியூரிலேர்ந்துகிட்டு உள்ளூர் நிலவரம் தெரியாம இருக்கீங்க" என்று? அப்படித்தான்

தன்னை தலைக்குப் பின்னால் ஒரு ஒளிவட்டம் இருப்பதாக சிவகுமாருக்கு எண்ணமில்லை. தன்னையே கேலி செய்து கொள்ளும் இயல்பினர். தயக்கமில்லாமல், திட்டமிடாமல், பலாபலன் கருதாது மனதில் நினைப்பதைச் சொல்லிவிடுகிறார். இந்த குணம் எதுவும் அவரை தமிழ் எழுத்தாளராக அடையாளம் காட்டவில்லை.



நான் நினைத்துப் பார்க்கிறேன். இணையம் என்று ஒன்று இல்லாவிட்டால், சிவகுமாரை நம் ஊடகங்கள் அறிய விட்டிருக்குமா?


**ELECTRICAL WORKS**

FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளிற்கு: 416-286-2880



**கிளிநொச்சி மக்கள் ஒன்றியம் கனடா நடத்தும் கோடைகால ஒன்றுகூடல்**

கிளிநொச்சி மக்கள் ஒன்றியத்தின் மூன்றாவது கோடைகால ஒன்றுகூடலை வெகுசிறப்பாக நடத்தவுள்ளது. சிறியவர் பெரியவர்களுக்கான விளையாட்டுப்போட்டிகள், நகைச்சுவை நிகழ்ச்சிகள், BBQ மற்றும் விருந்து சமைத்துண்டு மகிழ்தல் என்பனவும் இடம்பெறவுள்ளன. கிளிநொச்சித் தொகுதி வாழ் பெருமக்கள் அனைவரும் அழைக்கப்படுகின்றனர்.

**இடம்** - Down View Delis Park - Picnic Aria 1, (Sheppard & Keele)
காலம் - ஓகஸ்ற் 06, 2006 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி
தொடர்புகட்கு - ரவி- 416.887.5808 அருணன்- 416.893.2791 பிரபா- 416.561.0200

ஒன்றுகூடுவோம், சேருவோம், கொண்டாடுவோம்.



**திருகோணமலை மக்கள் ஒன்றுகூடல்**

திருகோணமலை நலன்புரிச் சங்கம் நடத்தும் கோடைகால ஒன்றுகூடல் எதிர்வரும் 13-08-2006 அன்று மு.ப. 10:00 மணிமுதல் பி.ப 6:00 மணிவரை மோணிங்சைட் பூங்காவில் நடைபெறும்.

இந்நிகழ்வில் சிறுவர் பெரியோர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளோடு பல்சுவை உணவுகளும் பரிமாறப்படும். கட்டணம் ஏதுமில்லை. திருகோணமலை மாவட்ட மக்கள் அனைவரையும் இதில் கலந்து கொள்ளுமாறு அன்போடு அழைக்கிறோம்.

கூடுதல் விவரங்களுக்கு: 416-402-6387, 416-303-4360, 416-823-8588 என்ற எண்களோடு தொடர்பு கொள்க. நன்றி.

செயற்குழு
திருகோணமலை நலன்புரிச் சங்கம்





**வீட்டில் முதலிட்டுச் சேமிக்கும் பணத்தை பல மடங்காகப் பெருக்கவும், பிள்ளைகளின் எதிர்காலத்தை வளமாக அமைக்கும் போதே உங்கள் ஓய்வு காலத்திற்காக ஒரு வீட்டினை இலகுவாகத் தேடிக் கொள்ளும் வழிகளை அறிந்து வாழ்க்கையில் வெற்றி பெற அழையுங்கள்.**

பரம்ஜி - **416.230.1107**

**PARAM GNANASWARAN**
Broker
**HOME LIFE GTA REALTY INC.** Brokerage*
Office East: 1711 McCowan Rd., Suite 206, Scarborough, ON
**416.321.6969**
Office West: 145 Traders Blvd., Suite 28, Mississuga, ON
**905.712.2666**
* INDEPENDENTLY OWNED AND OPERATED
paramg@gmail.com

**பத்தாம் எண்ணின் மகிமை!!!**

உலக கோப்பை கால்பந்து போட்டி களில் ரசிகர்களின் பார்வை முழுக்க பத்தாம் எண்ணுள்ள வீரர்கள் மீதே இருக்கும். அப்படி அந்த எண்ணுக்கு மகிமையை ஏற்படுத்தியவர் கள் பென்ரக் புஸ்கா, பீலே, மாரடோனா, ஜிகோ, பிளாட்டினி, ஜிடேன், ரொனால்டினோ போன்றோர் என்றால் மிகையில்லை.

பீலே, மாரடோனா, ஜிடேன், ரொனால்டினோ போன்றோர் உலக கோப்பையை வென்ற வீரர்கள். பென்ரக் புஸ்கா, பிளாட்டினி ஆகியோர் தலைசிறந்த ஆட்டக்காரர்களாகத் திகழ்ந்த போதிலும், அந்த வாய்ப்பு அவர்களுடைய அணிகளுக்குக் கிடைக்காததால் அவர்களுடைய திறமைகள் விழலுக்கு இறைத்த நீராகிவிட்டன.

லேசானது அல்ல சுமை - பத்தாம் எண்ணுள்ள சட்டையை அணிந்து விளையாடுவது சுலபம் அல்ல. நம் நாட்டு ரசிகர்கள் மட்டுமல்ல, சர்வதேச ரசிகர்களும் விமர்சகர்களும் கூட, அத்தகைய வீரரை உன்னிப்பாகக் கவனிக்கிறார்கள். சற்று களைப்பாகவோ, வலுஇன்றியோ விளையாடிவிட்டால், இவனுக்கு எப்படி இந்த எண்ணைக் கொடுத்தார்கள் என்று வாய்விட்டே முணுமுணுக்கிறார்கள் என்று குறிப்பிட்டார் பிரேசில் வீரர் ரொனால்டினோ. உலககிண்ண போட்டியில் அவர் தன்னுடைய திறமைக்கும் குறைவாகவே, ரசிகர்களின் எதிர்பார்ப்புக்கு மாறாக விளையாடினார். எனவே அவர் சொல்வது உண்மைதான்.

புஸ்காவின் சாதனை - 50 ஆண்டுகளுக்கு முன்னால் இந்த எண்ணுள்ள சட்டையை அணிந்து ஹங்கேரிக்காக ஆடிய பென்ரக் புஸ்கா, ஒலிம்பிக்கில் ஹங்கேரி தங்கப்பதக்கம் வாங்க முக்கிய காரணமாகத் திகழ்ந்தார். பிறகு 85முறை சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்று 84 கோல்களைப் போட்டிருக்கிறார். அவர் என்றால் அந்நாட்டு மக்களுக்கு உயிர்.

1954 உலக கோப்பை இறுதிப் போட்டியில் ஹங்கேரி அணி இறுதிச் சுற்றில் நுழைய புஸ்கா பெரிதும் காரணமாக இருந்தார். முதலில் நடந்த குழு அணிகளுக்கு இடையிலான போட்டியில் மேற்கு ஜேர்மனியை ஹங்கேரி 8 - 3 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது. ஆனால் இறுதி ஆட்டத்தில் ஜேர்மனியிடம் ஹங்கேரி தோற்றுவிட்டது - 3 - 2.

பீலே வந்தார் - அவருக்குப் பிறகு அந்த எண்ணுள்ள சட்டையை அணியும் தகுதியுடன் பிரேசிலின் பீலே வந்தார். 1958, 1962, 1970 களில் உலக கோப்பையை வென்ற அணியில் பீலே இடம்பெற்று சிறப்பாக ஆடினார்.

1958இல் 17 வயதாக இருந்த போது சுவீடன் அணிக்கு எதிரான இறுதி ஆட்டத்தில் பீலே இரண்டு கோல்களைப் போட்டார். அப்போது அவர் அணிந்திருந்த பத்தாம் எண்ணுள்ள சட்டை 50 இலட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது. 1970 ஆம் ஆண்டு இறுதி ஆட்டத்தில் வென்ற போது அவர் அணிந்திருந்த அதே எண்ணுள்ள சட்டை ஒரு கோடியே நாற்பது இலட்ச ரூபாய்க்கு ஏலம் போனது.

நேர்த்தியான பத்து - இந்த எண்ணுள்ள சட்டையை அணிந்த விளையாட்டு வீரர்களைப் பற்றியே தனி புத்தகம் வெளிவந்திருக்கிறது. அதன் பெயரே, 'பர்ஃபெக்ட் டென்' (Perfect Ten), பத்தாம் எண் ஆட்டக்காரர்களே தனிரகம். ஆனால் இப்போது கால்பந்து ஆடப்படும் விதத்தைப் பார்த்தால் இந்த ரக வீரர்கள் இனி கிடைப்பதே அபூர்வமாக இருக்கும் என்கிறார் நூல் ஆசிரியர் ரிச்சர்ட் வில்லியம்ஸ்.

1982, 1986 உலக கோப்பைப் போட்டி களில் பிரேசில் அணியில் இடம்பெற்ற சாக்ரடீஸ் என்ற ஆட்டக்காரர் அதற்கொரு காரணத்தையும்

# பத்தாம் எண்ணின் மகிமை

# விளையாட்டுத் தகவல்கள் 195

கூறுகிறார். '1970 களில் உலக கோப்பைப் போட்டியின் போது ஒவ்வொரு வீரரும், ஒரு ஆட்டத்தின் போது சராசரியாக நாலு கிலோ மீற்றர் தொலைவுதான் ஓடினார். இப்போது 12 கிலோ மீற்றர் தொலைவு ஓடும் அளவுக்கு போட்டி கடுமையாகிவிட்டது. பந்தை காலில் வாங்கும் போதே உதைத்துவிட வேண்டிய அளவுக்கு எதிர் அணி வீரர் நம்மை நெருங்கி விடுகிறார். எனவே கண்ணால் பார்த்து, காலை வளைத்து, வசதியான இடத்துக்கு பந்தை உதைக்க நேரமே இருப்பதில்லை' என்கிறார் சாக்ரடீஸ்.

1986இல் உலக கோப்பையை வென்ற பிறகு ஆர்ஜென்ரீனா அணியினர் பத்தாம் எண் சட்டையை இனி போட்டிகளில் பயன்படுத்தாமல்



## எஸ். கணேஷ்

இருந்துவிடலாம் என்று ஒரு யோசனையை முன்வைத்தனர். அப்போது டீகோ மாரடோனா அந்த சட்டையை அணிந்திருந்தார். அதை ஏற்றிருந்தால் நன்றாக இருக்குமோ என்று (பத்தாம் எண்ணுள்ள சட்டையை இப்போது அணியும்) சில வீரர்களும் நினைக்கின்றனர்.

## அடம்பிடிக்கும் மாரடோனா!

தான் மிகவும் மதிக்கும் போகா ஜுனியர்ஸ் கிளப் அணிக்குப் பயிற்சி அளிக்கும் வாய்ப்பை ஏற்க மறுத்துவிட்டுவிட்டார். ஆர்ஜென்ரீனாவைச் சேர்ந்த ஜாம்பவான் டீகோ மாரடோனா. ஆர்ஜென்டீனாவில் உள்ள புகழ்பெற்ற அணிகளில் ஒன்று போகா ஜுனியர்ஸ். தனது கால்பந்தாட்டத்தின் தொடக்க காலத்திலும், நிறைவு காலத்திலும் இந்த கழகத்துக்கே மாரடோனா விளையாடினார். ஆதலால் அதன்மீது அவருக்கு தனிமரியாதை உண்டு. அந்த அணி போட்டிகளில் பங்கேற்றால் மைதானத்துக்குச் சென்று வீரர்களை உற்சாகப்படுத்துவதை வழக்கமாகக் கொண்டு ள்ளார் அவர். அந்த கழகத்தின் துணைத் தலைவராக தற்போது உள்ளார் மாரடோனா. இந்நிலையில் அக் கழகத்துக்கு பயிற்சி அளித்துவந்த அல்பியோ பேசிலே, அப்பணியிலிருந்து விலகியதும், அந்த பணியை மாரடோனா மேற்கொள்வது சிறப்பாக இருக்கும் என கழகத்தின் உரிமையாளர் மாரிசியோ மேக்ரி கருதினார். ஆனால் மாரடோனா அதற்கு இசைவு தெரிவிக்கவில்லை. உலகில் உள்ள தலைசிறந்த கால்பந்து கழகங்களில் ஒன்றான போகா, எனக்கு பயிற்சியாளர் பதவியை அளிக்க, முன்வந்ததை கௌரவமாக கருதுகிறேன். ஆனால், அதற்குக் தேவையான அனுபவம் என்னிடம் இல்லை என விளக்கம் அளித்துள்ளார். "எங்கிருந்தாலும் தற்போது மகிழ்ச்சியுடனே இருக்கிறேன். இதுவரை பயிற்சி அளித்துவந்த பேசிலேவுக்கு மாற்றாக வருபவர் என்னைக் காட்டிலும் கூடுதல் அனுபவம் உடையவராக இருக்க வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மெக்ஸிகோ அணியின் முன்னாள் பயிற்சியாளர் ரிக்கார்டோ லா வோல்பேவை பயிற்சியாளராக நியமிக்க பிரேசில் சம்மேளனம் முயற்சி மேற்கொள்ளலாம் என மாரடோனா ஆலோசனை தெரிவித்துள்ளார்.

## மீண்டும பிரேசில்......!

பிரேசில் கால்பந்து அணியின் பயிற்சியாளராக முன்னாள் அணித்தலைவர் துங்கா (42) நியமிக்கப்பட்டுள்ளார். பிரேசில் கால்பந்து சம்மேளனம் இத்தகவலை தெரிவித்துள்ளது. ஜேர்மனியில் சமீபத்தில் முடிவுற்ற உலகக் கோப்பை கால்பந்தாட்டத்தில் பிரேசில் அணியின் பயிற்சியாளராக இருந்த கார்லோஸ் அல்பெர்டோ பெரைரா இருந்தார். அணிக்கு ஏமாற்றமான முடிவு கிடைத்ததை அடுத்து கடந்த வாரம் தனது பதவியை ராஜினாமா செய்தார் அவர்.

இந்நிலையில் 2010இல்தென் ஆபிரிக்காவில் நடைபெறும் 19வது உலகக் கோப்பை போட்டியில் ஆறாவது முறையாகக் கோப்பையைக் கைப்பற்றுவதாக இப்போதே பல்வேறு ஆயத்தப்பணிகளைத் தொடங்கியுள்ளது பிரேசில் கால்பந்து சம்மேளனம். அதன் முதல் கட்டமாக புதிய பயிற்சியாளராக துங்காவை நியமித்துள்ளது. 42 வயதாகும் துங்கா, 1994ஆம் ஆண்டு உலகக் கோப்பையை வென்ற பிரேசில் அணிக்கு அணித்தலைவராக இருந்தது குறிப்பிடத்தக்கது. ஒஸ்லோவில் ஓகஸ்ட் 16ஆம் திகதி நோர்வே அணியுடன் நட்புறவு ஆட்டத்தில் விளையாடுகிறது பிரேசில். அதுவே துங்காவுக்கு முதலாவது செயல்பாடாக இருக்கும்.

## இலங்கை VS தென்ஆபிரிக்கா

இலங்கை, தென்ஆபிரக்க அணிகளுக்கு இடையிலான முதல் துடுப்பாட்ட ரெஸ்ற் போட்டி கொழும்பில் வியாழக்கிழமை தொடங்கியுள்ளது. இரண்டு போட்டிகளைக் கொண்ட ரெஸ்ற் தொடரில் பங்கேற்க வந்துள்ள தென் ஆபிரிக்க அணி வலுவிழந்து காணப்படுகிறது. கணுக்காமல் காயம் காரணமாக அணித்தலைவர் கிரேம் ஸ்மித்தும், முழங்கை காயம் காரணமாக ஆல் ரவுண்டர் ஜாக் காலிசும் இலங்கைக்கு வரவில்லை.

மற்றொரு, முக்கியவீரர் ஷான் போலக், வியாழக்கிழமைதான் கொழும்பு வந்தடைந்தார். அவரது மனைவிக்கு இரண்டாவது குழந்தை பிறந்ததால் அணியுடன் அவர் இலங்கை வரமுடியவில்லை. இதற்கிடையே இங்கிலாந் துக்கு எதிரான தொடரில் சமீபத்தில் அபாரமாக ஆடியுள்ள இலங்கை, தாயக ஆதரவுடன் வெற்றி பெறும் முனைப்புடன் உள்ளது. இங்கிலாந்துக்கு எதிராக சமீபத்தில் அந்நாட்டில் நடைபெற்ற போட்டிகளில் 1 - 1என ரெஸ்ற் தொடரை சமன் செய்த இலங்கை ஒருதின தொடரை 5-0 என அபராமாக வென்றது. இதனால் தெம்புடன் காட்சியளிக்கிறது அந்த அணி.

"இங்கிலாந்துக்கு எதிராக அந்நாட்டில் எப்படி ஆடினோமோ அதே மாதிரியான ஆட்டத்தை இங்கும் வெளிப்படுத்தி வெற்றி பெறுவோம்" என இலங்கை அணி அணித்தலைவர் மஹேல ஜயவர்தனே புதன்கிழமை தெரிவித்தார். 37வயதாகும் முன்னாள் அணித்தலைவர் சனத் ஜயசூரியாவும் இப்போட்டியில் விளையாடுகிறார். ஓய்வு பெறுவதாக அறிவித்திருந்த அவர், இங்கிலாந் துக்கு எதிரான தொடரின் பாதியில் அம்முடிவைக் கைவிட்டார். தசைப்பிடிப்பு காரணமாக வாஸ் பங்கேற்கமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஏழு பேட்ஸ்மேன், நாலு பந்துவீச்சாளர் என்ற உதிரியுடன் இலங்கை களம் இறங்கும் எனத் தெரிகிறது. தென் ஆபிரிக்க அணியைப்பொறுத்தவரை ஆல் ரவுண்டர் ஆன்ரு ஹால் மகாயா நிதினி, ஆந்திரே நெல் ஆகியோர் அணிக்கு பக்க பலமாக இருப்பர் எனத்தெரிகிறது.

## இலங்கை வருகிறது இந்திய அணி!

பொதுவாக இந்திய ரசிகர்கள் துடுப்பாட்ட விளையாட்டு மீது அதிக நாட்டம் கொண்டவர்கள். ஆனால் உலகக் கிண்ண கால்பந்துப்போட்டி நடந்து போது துடுப்பாட்டம் அவ்வளவாக கண்டு கொள்ளவில்லை. மேற்கிந்தியத் தீவுகளுடன் இந்தியா அப்போது பங்கேற்று வந்தது. உலகக் கிண்ணக் கால்பந்துப் போட்டி முடிவுற்றதால் மீண்டும் நாட்டம் திரும்பியுள்ளது. அடுத்து இலங்கையில் நடைபெறும் மூன்று நாடுகளின் தொடரை ஆவலுடன் ரசிகர்கள் எதிர்பார்த்துள்ளனர்.

கொழும்பில் ஆகஸ்ட் 14 முதல் 29ஆம் திகதிவரை இத்தொடர் நடைபெறுகிறது. இந்தியா தனது முதல் ரெஸ்ரை இலங்கையை (16ஆம் திகதி) சந்திக்கிறது. தென்ஆபிரிக்க அணியும் இப்போட்டியில் பங்கேற்கிறது என்றாலும் இந்திய அணிகளே இறுதிச் சுற்றில் விளையாடும் என பெரும்பாலான ரசிகர்கள் நம்பியுள்ளனர். அதனால், இவ்விரு அணிகளிடையிலான சாதக, பாதக அம்சங்கள் குறித்தே சிந்தித்து வருகின்றனர்.


ஆனால், கடந்த கால பதிவுகளைக் கணக்கில் கொண்டால் இந்தியாவை விட இலங்கையே சிறப்பாக விளையாடி வந்துள்ளது தெரிகிறது. 1999 ஆம் ஆண்டுகளுக்குப்பின் இந்திய இலங்கை அணிகள் சந்தித்து நான்குமுறை இலங்கை அணி சாம்பியன் கிண்ணத்தை வென்றுள்ளது. இலங்கையில் நடைபெற்ற 33போட்டிகளில் 19இல் இலங்கை அணி வெற்றி பெற்றுள்ளது. அதே சமயம், இந்திய அணி இரண்டு முறை மட்டுமே கிண்ணத்தை வென்றுள்ளது. ஒன்பது போட்டிகளில் இந்தியா வுக்கு சாதகமாக அமைந்துள்ளன. ஐந்து போட்டிகள் முடிவு எட்டாமல் போயுள்ளன. 2002, 2003 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஐ.சி.சி சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளில் மழை காரணமாக இரு அணிகளும் கூட்டாக பட்டத்தை கைப்பற்றின.

முந்தைய வரலாறு இலங்கைக்கு சாதகமாக இருந்தாலும் சமீபத்திய முடிவுகள் இந்தியாவுக்கே சாதகமாகவே இருந்துள்ளன. இலங்கை, இங்கிலாந்து (இந்தியாவில் நடைபெற்றது) பாகிஸ்தான் உடன் கடைசியாக விளையாடிய தொடர்களை இந்தியா வென்றுள்ளது. தென் ஆபிரிக்காவுக்கு எதிராக இந்தியாவில் நடைபெற்ற தொடரை சமன் செய்துள்ளது. இருந்தாலும், மேற்கிந்தியத் தீவுகள் சமீபத்தில் நடைபெற்ற தொடரில் அந்நாட்டிடம் 1 - 4 என தொடரை இழந்தது துரதிஷ்டமாக அமைந்துள்ளது. இலங்கை அணியுடன் இலங்கையில் நடைபெற்ற போட்டி களில் அதிக வெற்றிகளைப் பெற முடியா விட்டாலும் வேறு நாடுகளில் இவ்விரு அணிகளும் விளையாடியதில் இந்தியாவே மேம்பட்ட ஆட்டத்தை வெளிப்படுத்தியுள்ளது.

இரு அணிகளும் பொது மைதானங்களில் 23 போட்டிகளில் விளையாடியுள்ளன. அதில் 15 இல வெற்றியும் ஏழு இல் தோல்வியும் பெற்றுள்ளது இந்தியா. ஒரு முடிவு இல்லாமல் போயுள்ளது.

அதே சமயம், இந்தியாவில் இரு அணிகளும் 33 முறை விளையாடி 23இல் இந்தியாவே வெற்றிக் கொடியைப் பிடித்துள்ளது. ஒன்பதில் தோல்வியையும், ஆட்டத்தில் முடிவு காணாமலும் போயுள்ளது. முக்கோணத்தொடர் கொழும்பில் பிரேமதாசா மைதானத்திலும் SSC கிளப் மைதானத்திலும் நடைபெ றவுள்ளன. இரண்டுமே இலங்கை அணிக்கு ஓட்ட வேட்டையாடும் மைதானங்கள் என கணிக்கப்பட்டுள்ளன. பிரேமதாசா மைதானத்தில் நடைபெற்ற ரெஸ்ற் போட்டியில் தான் அதிக ஓட்டங்களைக் குவித்து உலக சாதனையை இலங்கை பதிவு செய்தது. ஆறு விக்கெட்டுகளுக்கு 952 ஓட்டங்களைக் குவித்து சாதனை படைத்தது.



# இல்லம் வாங்கும் போது வீட்டுப்பரிசோதனை (Inspection) தேவையா?

**நாமும் நமது இல்லமும்**

ராஜா மகேந்திரன்

தொடர்-2 3 2

இல்லம் வாங்குவது ஒரு மனதிற்கு பிடித்த சம்பவம் - நிகழ்வு. இது ஒரு மகிழ்ச்சியான விடயமும் கூட. பலரின் கூற்றின்படி, வீடு பார்ப்பதற்காக வீட்டு முகவருடன் செல்லும்போது மனம் ஒன்றிய வீடுகளே கிடைக்கும். வீடுவாங்கும் போது நாங்கள் மனதிற்குப் பிடித்ததிற்காக மட்டும் வீட்டைத் தெரிவு செய்யாமல், வீட்டிலுள்ள மற்றைய விடயங்களையும் ஆராய்ந்து முடிவு எடுத்தல் வேண்டும். வீட்டிலுள்ள பெரிய பிழைகளை திருத்தப்படவேண்டிய விடயங்களை இலகுவாகக்கண்டுபிடித்து விடமுடியும். எனவே வாங்கவிரும்பும் வீட்டிலுள்ள முக்கிய குறைபாடுகளை, நிறைகளை சிறந்த அனுபவமிக்க வீட்டு பரிசோதகரால் (Home Inspection) கண்டுபிடிப்பதே நன்மை பயக்கும். வீட்டுப்பரிசோதகரின் சரியான தகுந்த தொழில் ரீதியான அறிவுறுத்தல்களின்படி வீடு வாங்குவதே, எதிர்காலத்தில் வரவிருக்கும் பிழைகளைக் கோடிட்டு காட்டமுடியும். எனவே பல ஆயிரம் டொலர்கள் கொடுத்து வீடு வாங்கும்போது சிலநூறு டொலர்கள் கொடுத்து தகுதியான வீட்டு பரிசோதகரைக் கொண்டு வீட்டின் அகமும், புறமும் குறித்தமுறையில் பரிசோதித்து வீட்டை வாங்குதல் வேண்டும்.

வீடு வாங்குபவர்களில் சிலரின் கூற்றைப் பார்க்கவும். “எனது நண்பர் இரண்டு, மூன்று வீடு வாங்கி விற்றவர். அவரைக் கூட்டிச் சென்று வீட்டைச் சோதிப்பது நல்லது, பணமும் சேமிக்கலாம்.” இந்த முறை சரியல்ல. இதனை நான் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. 1000 கணக்கில் வீட்டு பரிசோதனை செய்த வீட்டு பரிசோதகரைக் கொண்டு சோதனை செய்தல் நல்லது. முக்கியமாக, தொழில்ரீதியான வீட்டுபரிசோதகர் (Professional Home Inspector) வீட்டிலுள்ள சரி, பிழை, திருத்தவேண்டிய மற்றும் ஒழுங்கான பராமரிப்புக்களையே கவனத்தில் கொள்வார். வீட்டின் மேலெழுந்த வாரியான வடிவமைப்புடனும் நிறப்பூச்சுகளுடனும், அங்குள்ள தளபாடங்கள், பொருட்களுடனும் ஒன்றிவிடமாட்டார் என்பதையும் மற்றும் வீட்டின் விலை சரியா, பிழையா கூடவா, குறைவா என்பதையும் கவனத்தில் கொள்ளமாட்டார். முக்கியமாக குறிப்பிட்ட வீடு அரசினால் தடுக்கப்பட்ட தாவரங்கள் வளர்க்கப்பட்ட (Grow House) இல்லமா என்பதனை இலகுவில் அறிந்து கொள்வார்.



### வீட்டு பரிசோதகர் கவனிப்பதில் முக்கியமானவை


1. வீட்டின் மொத்த கட்டிட அமைப்பு (Structure)
2. வீட்டின் அகமும், புறமும் (Exterior / Interior)
3. கூரை, சிம்னி, (Roof, Chimney)
4. மின்சாரத்தொகுதி (Electrical System)
5. வெப்பமூட்டும் பகுதி (Heating System)
6. தண்ணீர் கழிவுகள் செல்லும் மொத்ததொகுதி (Plumbing System)
7. குளிரூட்டும் பகுதி (Air Condition)
8. வெப்பம், குளிரை இழக்காமல் பாதுகாக்க பாவிக்கும் பொருட்கள் (Insulation)
9. வீட்டின் கீழ்ப்பகுதி / அடிப்பகுதி (Basement)

**குறிப்பு** - பொதுவாக வீட்டிலுள்ள நீறப்பூச்சுகள், சுவரில் ஒட்டப்பட்டிருக்கும் பேப்பர்கள், வீட்டின் முக்கிய உதிரிப்பாகங்கள் (Appliances), ரெலிபோன், கேபிள் வயரிங் போன்றவற்றை அனேகமாக பரிசோதகர்கள் பரிசோதிப்பதில்லை.

மற்றும் வீட்டுப்பரிசோதகர், கண்ணால் பார்த்தே பரிசோதனை செய்கின்றார். இதனால் வீட்டை உடைத்தோ, நிலத்தை கிண்டியோ, வேறுவிதமான பொறியியல் முறையான சோதனைகளோ செய்வதில்லை. இதற்கு வீட்டின் சொந்தக்காரர் அனுமதிக்கப்போவதில்லை. மற்றும் வீடு விற்பவரே வீட்டின் உரிமையாளர் என்பதனை கவனத்தில் கொள்ள வேண்டும். இதனால் பரிசோதகர், வீட்டு உரிமையாளரின் உரிமையை மதித்து அதற்கேற்ப தான் பரிசோதிக்க முடியும் என்பதனை வீடு வாங்குபவர் ஞாபகத்தில் கொள்வது நல்லது.

வீடு வாங்கித்தரும் உங்கள் முகவர்களைக் கொண்டு குறைந்தது மூன்று வெவ்வேறான பரிசோதகர்களின் பெயரைக் பெற்று அவர்களுடன் கதைத்து ஒருவரைத் தெரிவு செய்தல் நல்லது. குறைந்த ஊதியம் என்பதனை மட்டும் கவனத்தில் கொள்ளாமல் அனுபவத்தை முக்கியமாக கவனத்தில் கொண்டு தகுந்த பரிசோதகரை தெரிவுசெய்தல் நல்லது.

பொதுவான பரிசோதகர் வீட்டில் புகுமுன்னர், வீட்டின் வெளிப்புறத்தை கவனத்தில் கொள்வர். பின்னர் வீட்டின் கீழ்பகுதி பிரதான தளம், மேற்பகுதி என்ற ஒழுங்கில் செய்வது அதற்காக இவ்வாறுதான் எல்லா பரிசோதகர்களும் செய்வார்கள் என்பதற்கில்லை.



# எனது முதல் இயக்குனர்

## எனது நாடக அனுபவங்கள் (5)

### சில வழக்குகள்

அக்காலத்தில் பெண்கள் கூத்துகளில் நடிப்பதில்லை. பெண் பாத்திரங்களையும் ஆண்களே தாங்கி நடிப்பார்கள். அப்படித் தாங்குதற் குரியவர்கள் பெரிதும் இளைஞர்களாகவே இருப்பர்.

பாரதத்திலும் ஆண்களே பெண் பாத்திரங்களை ஏற்று நடித்தனர். எமது இறுக்கமான பண்பாடு பெண்களை ஆண்களோடு சேர்ந்து நடிக்க அனுமதிக்கவில்லை. எனின் மேற்குலகத்திலும், குறிப்பாக இங்கிலாந்தில் சேக்ஸ்பியர் காலத்திலும் இந்த நிலைமையே நிலவியது என்பது கவனிக்கத் தக்கது.

கூத்துத் தொடங்குவதற்கு இரவு பத்துப் பதினொரு மணியாகும். தொடங்கி விடியும் வரை நடைபெறும். கூத்தைப் பார்ப்பதற்கு ஏராளமான கூட்டம் திரளும். அயலூர்களிலிருந்தும் பார்வையாளர் விளக்குகள் பாய்களுடன் வருவர். தற்காலிகமான கடைகளும் நடத்தப்படும்.

ஆட்களை அடக்குவதற்கென்று நாட்டாண்மைக்காரர் ஒருவர் முறுக்கிய சால்வையுடன் அங்குமிங்குமாகத் திரிவார். அவர் காட்சி அளித்தால் நாடகம் தொடங்கப் போகிறது என்று அர்த்தம். முறுக்கிய சால்வையால் சத்தம் போடுகின்ற குழப்படிச் சிறுவரே அடி வாங்குவர்.

எமது ஊரில் இருவகையான ஆடுகளங்களைப் பார்த்திருக்கிறேன். எனது மாமனார் ஆடிய நொண்டி நாடகம் நான்கு மரங்களுக்கு (கப்புகளுக்கு) இடைப்பட்ட சதுர அளவினதான நிலத்திலேயே ஆடப்பட்டது. நடப்பட்ட நான்கு கப்புகளும் ஒரு கயிறுகளினால் இணைக்கப்பட்டிருக்கும். இணைப்பும் அதற்குள் பார்வையாளர் செல்லக் கூடாது என்பதைக் காட்டத்தான். கூத்துத் தொடங்கும் நேரத்தில், நடிகர்கள் வரப்போக வசதியாகப் பின்பக்கத்து இணைப்புக் கயிறு அவிழ்த்து விடப்படும். முன் கப்புகளில் பெற்றோல் விளக்குகள் தொங்க விடப்பட்டிருக்கும்.

மிலிட்டரி கந்தையா அண்ணர் ஆடிய கோவலன் கூத்து, கால்கள் நட்டுப் பலகைகள் வைத்து அமைக்கப்பட்ட உயர்ந்த மேடையில் நடந்தது. திரைச் சீலைகளும் (சீன்களும்) பயன்படுத்தப்பட்டன. காத்தவராயன் கூத்தையும் அத்தகைய அரங்கிலேதான் பார்த்தேன்.

### செவியை மறைத்த கொம்பு

நான் வளர வளர, திரைப்படத் துறையும் வளர்ந்து வந்தது. கல்வி வசதிகளும் பெருகின. நவீன நாடகங்களில் இளைஞர் நாட்டங் கொண்டனர். அண்ணாவி மரபை எடுத்துச் செல்லக் கிராமப் புறங்களில் ஆட்கள் குறைந்தனர். உத்தியோகங்கள் காரணமாக நேர நெருக்கடியும் குறுக்கிட்டது. இவற்றால் நாட்டுக் கூத்து ஆட்டங்கள் குறையலாயின.

முந்திவந்த செவிகளைப் பிந்திவந்த கொம்புகள் மறைப்பதைப்போன்று, மண்ணின் கலைகளை மேனாட்டுக் கலைகள் மறைக்கலாயின.

எனது கூத்துச் சூழலும் நவீன நாடக உலகத்துக்குப் புலம்பெயர்ந்தது.

### எனது முதல் இயக்குநர்

என்னை முதன்முதலில் வீரபத்திரப் பெருமானே நடிக்கத் தூண்டியவர். அந்த வயதில் - பள்ளிக்கூடமே செல்லாத 4-5 வயதுப் பருவத்தில் அது ஒரு விளையாட்டு, நாடகம் என்றால் என்ன என்றே தெரியாத பாவனைக் கூத்து.

### ஆசிரியர் திரு. P.D. சின்னையா

நாடகம் என்று சொல்லி என்னைப் பழக்கி முதன் முதலில் மேடையேற்றியவர் ஆசிரியர் திரு. P.D. சின்னையா அவர்கள். அவரும் நுணாவிலூர்தான்.

நான் சாவகச்சேரி இறிபேக் கல்லூரியிற் படித்துவருங் காலத்தில் கீழ் வகுப்புகளில் எனக்கு ஆங்கிலம் கற்பித்தவர் ஆசிரியர் திரு. சின்னையா அவர்கள். திறமான ஆசிரியர். ஆங்கிலத்தைத் திருத்தமாக எழுதவும் சரியான உச்சரிப்புடன் பேசவும் வைத்தவர் இவர்தான். ஆங்கிலச் சொற்களை அவர் சொல்வதுபோல உச்சரித்துக் காட்டாது போனால் அன்றைக்கு வீட்டுக்கும் வந்தபாடில்லை. அவரது வகுப்பில் தமிழ் பேசினால் ஒரு சதம் உண்டியலிற் போடவேண்டும்.



1947ஆம் ஆண்டு சாவகச்சேரி தெய்வேந்திராப் படமாளிகையில் எமது கல்லூரி ஒரு கலைவிழா நடத்தியது. கல்லூரி வளர்ச்சிக்கு நிதி திரட்டும் நுழைவுச்சீட்டுக் காட்சி என்று நினைக்கின்றேன். அந்த விழாவில் 'The School Master' என்று ஒரு நாடகம் மேடையேற்றப் பட்டது. அதனை எழுதிப் பழக்கி மேடையேற்றிய வர் ஆசிரியர் திரு. P.D. சின்னையா அவர்கள்.

### ஒத்திகை

ஒருநாள் ஆங்கில வகுப்பு முடிந்தபின், சின்னையா ஆசிரியர் என்னைக் கூப்பிட்டு அன்று மாலை தனது வீட்டுக்கு வரும்படி பணித்தார். அந்தக் காலத்தில் ஆசிரியர்மார் ஏதாவது செய்யும்படி பணித்தால் அதனைத் தலைமேற் கொண்டு செய்வதுதான் எங்கள் கடமை. ஏன் எதற்கு என்று யாரும் கேட்பது கிடையாது.

நான் கல்லூரியால் வீட்டுக்கு வந்து எனது, மாமிக்கு விடயத்தைச் சொல்லி அனுமதி பெற்றுக்கொண்டு ஆசிரியர் சின்னையா வீட்டுக்குச் சென்ற பொழுது, நான் ஒரு நாடகத்தில் மாணவனாக நடிக்க வேண்டும் என்றார் அவர்.

நாடகம் ஒரு தலைமையாசிரியரைப் பற்றியது. எனக்கும் அவருக்குமிடையில் நடைபெறும் உரையாடல்களை வாசித்துக் காட்டினார். பின்னர் தலைமையாசிரியருக்கு உரிய வசனங்களைத் தான் பேசிக்கொண்டு எனக்குரிய வசனங்களைச் சொல்லிக் காட்டினார். அவற்றைக் கேட்டுவிட்டு நான் திருப்பிச் சொல்ல வேண்டும். இப்படி ஒரு மணித்தியாலம் அளவில் ஒத்திகை நடந்தது.

இது முதற் சந்திப்பு. மற்றைய நடிகர் எவரையும் அன்றைய தினம் ஆசிரியர் அழைக்க வில்லை. எனக்கு மட்டும் பயிற்சி நடந்தது. வசனங்களையும் அவர் எழுத்தில் தரவில்லை. அவையும் அதிகம் இல்லை. பிறகு அடுத்த சனிக்கிழமை பகல் வரச்சொல்லி என்னை அனுப்பிவிட்டார்.

அடுத்த சனிக்கிழமை நான் சென்றபோது ஆசிரியர் கிடுகு பின்னிக் கொண்டிருந்தார். கிடுகைப் பின்னியவாறே வசனங்களைச் சொல்லித் தந்தார். அன்றைய தினம் வசனங்களுக்கேற்ப உணர்ச்சி வெளிப்பாடு, தொனி என்பன எப்படி அமைய வேண்டும் என்று பேசிக் காட்டினார்.

மற்றவர்களுக்குக் கல்லூரியில் பின்னேரங்களில் ஒத்திகைகள் நடந்தது. அவற்றுக்கு என்னைக் கூப்பிடவில்லை. மேடையேற்றத்துக்கு முதல் வாரம் எல்லோரும் சேர்ந்த ஒத்திகையை ஒவ்வொரு நாளும் ஆசிரியர் நடத்தினார். அக்கட்டங்களிலேதான் கதை முழுவதுமாக எனக்கு விளங்கலாயிற்று.



கவிஞர் வி. கந்தவனம்

18 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

யோகாஸ்

### குறுக்கு எழுத்துப் போட்டி இல. 177

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | 2 |
| | | | 3 | | | | |
| | | 4 | | | 5 | | |
| 6 | | | | | | | |
| | | | | | 7 | | |
| | 8 | | | | | | |
| | 9 | | | | | 10 | 11 |
| 12 | | | | | | | 13 |

**இட - வல**
1. உதைபந்தாட்டத்தில் இம்முறை உலகக் கிண்ணத்தை பெற்ற நாடு
2. தமிழர் உணவு (வல - இட)
5. அழகு
6. நோக்கம்
8. இராசிகள் இத்தனை
9. மணமகள் (வல-இட)
11. தழும்பு (வல-இட)
12. கோடைகாலம்

**மேல் - கீழ்**
1. தீயநெறி
2. தமிழர்கள் 37 நாட்கள் உண்ணா விரதம் இருந்த நாடு
3. சத்தம் (கீழ்-மேல்)
4. கொழுநன்
5. எல்லை (கீழ்-மேல்)
7. திரும்பவும்
8. உலா
10. மாம்பிஞ்சு (கீழ் - மேல்)
12. வெம்மை (கீழ் - மேல்)
13. ஆ (கீழ்-மேல்)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| எ | டு | த் | து | க் | கா | ட் | டு |
| ஞ் | | | தி | | ண் | | ஏ |
| ஞா | யி | று | | | டீ | | |
| ன் | | | உ | ப் | ப | ரி | கை |
| று | யி | வ | | | ம் | | த |
| ம் | | ங் | | சு | | | த் |
| | வி | கா | | ஞ் | | ப | கு |
| அ | ல் | லை | ப் | பி | ட் | டி | |

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக் கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் August 28, 2006க்கு முன்னர் விளம்பரம் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**176இல் வெற்றி பெற்றோர்**
1) A. Saraswathy, Donmills
2) M. Chinniah, Scarborough

• ஆட்டிறைச்சி வியாபாரத்தில் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
• அன்றாட சந்தையில் மரக்கறி, மீன் வகைகளை தினமும் தருவித்துக் கொடுப்பவர்கள்.
• வாடிக்கையாளர்களின் தொகையில் உயர்ந்தவர்!

**(416) 267-0408** 731 - 733 Kennedy Road [Ken-Mark Plaza]

SAFETY TRUCKS

**Training School Ltd.**

Training & Trucking Classes A, D & Z




In Classes
• 365 (Learning Permit)
• Log Books
• Air Brake (Z)
• Dangerous Goods
• Border Crossing
• Defensive Driving Course

• தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
• One On One Training
• அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும்.
வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.
• கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம். (12 ஆம் ஆண்டு)
• We Accept Welfare & Unemployment Insurance
• வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

19 Years Canadian
Experience with Trucks

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

YOGAN SOCKALINGAM

Truck Driving போதனாசிரியர்

**905-793-9546 / 416-616-5979**

4 Wilkinson Road, 2nd floor, Brampton, ON L6T 4M3

# கலையுலகில் ஒரு கலங்கரை விளக்கு

சென்ற வெள்ளிக்கிழமை ஜுலை 7ஆம் நாள் ஒரு சிறப்பான கலையம்சம் பொருந்திய நடன அரங்கேற்றத்தைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. கோடை என்றால் குதூகலதுக்குக் கேட்டகவா வேண்டும். அரங்கேற்றம், கச்சேரி, சினிமாக்காரரின் படையெடுப்பு, கொண்டாட்டம், வாணிப வசந்தம், நூல் வெளியீடு, இறுவட்டு வெளியீடு என தொரொன்ரோ மாநகர் சென்னையைத் தோற்கடிக்கும் வகையில் விழாக்களைக் கொண்டாடுகிறது. இவற்றோடு கோவில்களும் திருவிழாக்களென மக்களைத் திறணடிக்கின்றன. எங்கே போவது எதற்குப் போவது என மக்கள் குழம்பிப் போகிறார்கள். எது எப்படி இருப்பினும் தொரொன்ரோ ஒரு தமிழ்கலைக் கூடமாக முன்னேறிக்கொண்டிருக்கின்றது. வாரா வாரம் பல அரங்கேற்றங்கள் நடைபெறுகின்றன. தாயகத் துயர்களை மறப்பதற்கும் இறையருளின் மேன்மையை யாவருக்கும் உணர்த்துவதற்கும் இக்கலை நிகழ்ச்சிகள் சிறந்த ஊடகங்களாக அமைகின்றன. எனவே இந்நிகழ்ச்சிகளை நடத்தும் பெற்றோர்களையும் ஆசிரியர்களையும் நாம் பாராட்டாமல் இருக்கமுடியாது.

அன்று நடன ஆசிரியை ஜயந்தி சண்முகலிங்கத்தின் மாணவியாகிய காஞ்சனா புறூடியின் அரங்கேற்றம் சேர் ஜோன்மக்டொனல்ட் கல்லூரிக் கலையரங்கில் வெகு விமரிசையாக நடைபெற்றது. வாசலின் இருமருங்கிலும் விளக்கேந்திய வனிதையர் வரவேற்பு, வாசலில் வண்ணக் கோலங்களும் அலங்காரமும், மேடை, நடேசப் பெருமானின் இருக்கை அலங்காரம் யாவும் யாவரையும் வியப்பிலாழ்த்தின. இதுவும் போதாதென்று வாசலில் கோப்பியும் குக்கீசும் யாவரையும் வரவேற்றன.


## துறையூரான்


கவர்ச்சியான முறையில் அச்சடிக்கப்பட்டிருந்தது நிகழ்ச்சி மடல். அதைத் தயாரித்தவர்களுக்கும் அச்சேற்றியவர்களுக்கும் பாராட்டுக்கள். அத்தடன் கண்ணைக்கவரும் வகையில் மண்டபத்துக்கு உள்ளேயும் வெளியேயும் அலங்காரங்கள் செய்த அத்தனை பேருக்கும் பாராட்டுக்கள். அன்றைய நிகழ்வில் பலரது ஒத்துழைப்பையும் காணக்கூடியதாய் இருந்தது. அரியாலையூர் மக்களின் ஒற்றுமை கலையார்வம் தமிழ்ப் பண்பாட்டு விழுமியங்கள் போன்ற பல செயற்றிறன்கள் அன்று அரங்கேறின என்றால் வீண் புகழ்ச்சியில்லை. தாயகத்தில் வரலாறு படைத்தவர்கள் புகலிடத்திலும் புகழோடு வாழ்கிறார்கள் என்பதைப் பார்க்கும் போது பெருமையாக இருக்கிறது. அயலூரான் என்பதால் இவர்கள் பலரை நானறிவேன்.

இவ்வாறான நிகழ்ச்சியில் பலரின் ஒத்துழைப்போடு செயற்படும்போது நேரத்தைக் கடைப்பிடிப்பதென்பது கடினமெனினும் இதில் கூடிய கவனஞ்செலுத்துவது நன்று.

நிகழ்ச்சி மாலை 7 மணிக்கு தெய்வ வழிபாட்டுடன் ஆரம்பித்தது. சாயிபாபா பஜனையுடன் நிகழ்ச்சி ஆரம்பமாகியது. எமது சைவ பாரம்பரிய முறைகளையும் நாம் மறந்துபோகக் கூடாது. எமது கலைகள் தெய்வீகக் கலைகள் எனப்படுகின்றன. எனவே கலையும் தெய்வ வழிபாடும் இரண்டறக் கலந்துள்ளன என்பது கூறாமலே விளங்கும். ஆடலுக்கதிபதி எம் ஆணடவன்.

எனவே இதுபோன்ற நிகழ்சிகளுக்கு பெரும்பான்மை இனத்தவரையும் ஊடகங்களையும் கலந்து கொள்ளச் செய்வதில் நாம் கூடிய அக்கறை எடுப்பது நல்லது. பல்லாயிரம் வருடங்களாகக் கட்டிக்காக்கப்படும் கலைப் பொக்கிசங்களுக்குச் சொந்தக்காரரான தமிழர்கள் பண்பாடும் சீரிய விழுமியங்களும் நிறைந்தவர்கள் என்பதை யாவரும் அறிய வேண்டும். துவக்குச்சூட்டையும் குழுப் போராட்டங்களையும் கொச்சைப்படுத்தி கூட்டிக்காட்டும் பெரும்பான்மை இன ஊடகங்கள் இந் நிகழ்ச்சிகளைப்பார்த்து எம்மைச் சரியாக எடைபோட வைத்தல் எமது முக்கிய கடமையாகும். அன்றைய நிகழ்ச்சிக்குச் சில வேற்றின மக்கள் அழைக்கப்பட்டிருந்தது நல்ல முயற்சி.

அன்றைய நிகழ்ச்சியின் ஒவ்வொரு அம்சத்தையும் பற்றி எழுதுவதென்றால் ஒரு நூலே எழுதலாம். எனவே சிறப்பம்சங்களைப் பற்றிப் பார்ப்போம். மேலைத்தேயச் சூழலில் வளரும் குழந்தைகளுக்கு எவ்வாறு எமது கலைகள் மூலமாக எமது பண்பாட்டு விழுமியங்ளை உணரச் செய்கிறோம் என்பதற்கு அன்று அரங்கேறிய காஞ்சனா ஒரு சிறந்த உதாரணமாகத் திகழ்கிறார். ஆங்கிலப் பாடல் பியானோ வாசித்தல் ஆகியவற்றிலும் திறமை பெற்ற காஞ்சனா ஆடற்கலையைக் கற்றதனால்



தன்குத் தெய்வ நம்பிக்கையும் மனத்திடமும் ஏற்பட்டிருப்பதாக நன்றியுரையின் போது கூறினார். இதற்கெல்லாங் காரணமாயிருந்த குருவுக்கும் பெற்றோருக்கும் நன்றி கூறினார். கலை கலைக்காக மட்டுமன்றி உளவளர்ச்சிக்கும் உகந்ததென்பது இதனால் புலனாகிறது. இதை நன்குணர்ந்தே எமது முன்னோர் கலைகளைப் பல்லாயிரம் ஆண்டுகளாகக் கட்டிக்காத்து வந்தனர் என்பது கண்கூடு. அதனை விளக்கும் வகையில் நண்பர் புவனநாதன் சிறந்த உரையினை ஆங்கிலத்தில் நிகழ்த்தினார். கன கச்சிதமாகச் சொற்களைப் பொறுக்கி எடுத்து அழகு ஆங்கிலத்தில் அறுத்துறுத்துக் கூறியது சிறப்பாய் இருந்தது. மூளை வளர்ச்சியில் முன்னேற்றங் காணும் மேலைத்தேய நாடுகள் உளவளர்ச்சியை உதாசீனஞ் செய்வது பற்றி யாவர்க்கும் உறைக்கும் வண்ணம் உரையாற்றினார். இவரின் கூற்றுக்கு உதாரணமாகத் திகழ்கிறார் காஞ்சனா. இவர் தமிழிலும் புலமை பெற்று எமது பண்டைய அறிவுப் பொக்கிசங்களைப் பற்றி அறிவது மிக முக்கியம்.

காஞ்சனா எடுத்த காரியத்தைச் சிறப்பாகச் செய்து பார்வையாளரை மட்டுமன்றி குருவையும் பெற்றோரையும் மட்டற்ற மகிழ்ச்சியல் ஆழ்த்தினார். ஆடற்கலையின் நுணக்கங்களை உணர்ந்து அதற்கேற்ற அபிநய முத்திரைகளோடு உணர்ச்சிகளையும் வெளிக்கொணர்ந்து தனது வித்துவச் சிறப்பை யாவரும் அறிய வைத்தார். அவரது கலையார்வம் மென்மேலும் வளர வாழ்த்துக்கள்.

அடுத்து காஞ்சனாவின் குருவைப் பற்றிப் பார்ப்போம். திருமதி ஜயந்தி சண்முகலிங்கம் பற்றி அறியும் வாய்ப்பு எனக்கு மூன்று மாதங்களுக்கு முன்பாக சிவயோக சுவாமிகளின் விழா றிச்மண்ட் ஆலய மண்டபத்தில் நடைபெற்றபோது ஏற்பட்டது. அவரது மாணவிகள் சிவபுராணத்துக்கு ஆடிய நடனம் யாவரையும் கவர்ந்தது. அவர் சுவாமிகளின் அனுக்கிரகம் பெற்றவர்கள் என்பதையும் அறிந்துகொண்டேன்.

ஆசிரியர் புதிய உத்திகளையும், அங்க அசைவுகளையும், தாள ஜதிகளையும் மிகவும் நுட்பமாக நுழைத்து நடன நிகழ்ச்சிகளைத் தயாரித்த விதத்தில் கொடிகட்டிப் பறக்கிறார். ஆசிரியரது அபிலாசைகளை அப்படியே உள்வாங்கி சிறப்பாக நடனமாடிய காஞ்சனாவுக்குப் பலமுறை பாராட்டுக்கள் கூறலாம். ஆசிரிய மாணவ ஒத்துழைப்பினால் எவ்வாறு சிறப்பான உள்ளத்தைக்கவரும் நிகழ்ச்சிகளைத் தயாரிக்கலாம் என்பதற்கு அன்றைய அரங்கேற்றம் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

அன்றைய நிகழ்ச்சிக்குப் பாடப்பட்ட பாடல்கள் யாவும் சிறப்பாய் அமைந்திருந்தன. பாரதிதாசனின் சாகாவரம் பெற்ற துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ இன்பஞ் சேர்க்க மாட்டாயா என்ற பாடலும் அபிநயமும் எல்லோர் மனதையும் உருக்கியிருக்கும் என்பதில் ஐயமில்லை. இசையின் வலிமையையும் கல் மனதையும் உருகச்செய்யும் திறமையையும் அன்று யாவரும் உணர்ந்திருப்பர். பாரதியாரின் சிவசக்தி பாடலுக்கும் சிறப்பாக ஆடினார் காஞ்சனா. பாடல்களைப் பாடிய இளங்கலைஞர் ஒளிர்விட்டுப் பிரகாசிக்கும் சங்கீத வித்துவான் யாதவன் அன்றைய கச்சேரியின் தரத்தை உயர்த்தியதில் பெரும்பங்கு வகித்தார். கலைப் பரம்பரையில் வந்த யாதவன் வெண்கலக்குரலில் மனதை உருக்கும் வகையில் பாடி யாவரையும் இசைக்கடலில் மிதக்க வைத்தார். தொரொன்ரோவின் முன்னணிப் பாடகராகிய திருமதி பவானி ஆலாலசுந்தரமும் அவர் மகள் அகிலா கிரிகரனும் இடைக்கிடை பாடி நிகழ்ச்சிக்கு மெருகூட்டினர்.



அடுத்து மிருதங்கம் வாசித்த வாசுதேவன் இராஜலிங்கம் கனடாவில் மிருதங்க வாத்தியத்தை அறிமுகஞ் செய்து ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி நிற்கும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் பழைய மாணவர். ஆண்டு தோறும் அவர் தனது வாசிப்பின் தரத்தை உயர்த்திக் கொண்டு வருவதை நான் காணக்கூடியதாய் இருக்கிறது. மிருதங்க வானில் ஓர் உன்னத இடத்தை அடைந்திருக்கும் அவர் ஒரு அமைதியான ஆனால் ஆழமான வித்துவச் சிறப்புள்ளவராக விளங்குவது எமக்கெல்லாம் பெருமையே. அன்றைய கச்சேரியில் வெளுத்து வாங்கினார் என்பது எல்லோருடைய முடிவு.

வயலின் வித்துவான் கேசவ மூர்த்தியும் இசை உலகில் பிரபலமான ஒருவர். தொரொன்ரோவில் பல கச்சேரிகளின் மூலம் தனது ஆற்றலை வெளிப்படுத்தி நற்பெயர் பெற்றுள்ளார்.

அன்றைய அரங்கேற்றத்துக்கு முக்கிய விருந்தினராக இலண்டனிலிருந்து திருமதி குணவதி சேக்ஸ்பியர் கலந்து கொண்டார். இவரும் ஒரு பிரபலமான நடன ஆசிரியை. இவர் தாயகத்தில் புகழ்பெற்ற திருமதி கமலா ஜோன்பிள்ளையின் சகோதரியும் காஞ்சனாவின் உறவினருமாவர். கௌரவ விருந்தினராக காஞ்சனாவின் பாட்டியார் திருமதி லலிதா புரூடி கலந்து கொண்டு ஆங்கிலத்திலும் தமிழிலும் உரையாற்றினார். இவர் ஒரு சிறந்த எழுத்தாளரும் சமூக சேவகியும் என்பது யாவரும் அறிந்த விடயம். நிகழ்ச்சிகளைத் தொகுத்தளித்த சிறீகாந்தனும் அஞ்சலாவும் தமது கடமையைச் சிறப்பாகச் செய்தனர். அளவையூர் அஞ்சலாவை சங்கடத்துக்குள்ளாக்கியதைக் காணமுடிந்தது. மொத்தத்தில் அன்று நடந்தது அரங்கேற்றமா அல்லது அனுபவசாலியின் நடன நிகழ்ச்சியா எனப் பலர் வியந்து நின்றனர்.

---

*அன்புக்குரிய வாசகர்களுக்கு!*

*முத்துராஜாவின் 60 கவிதைகள் அடங்கிய "சுனாமி" எனும் கவிதைத் தொகுப்பு விரைவில் உங்களுக்குக் கிடைக்க உள்ளது என்பதை அறியத் தருகின்றேன்.*

---

# வைகாசி - 2006



*ஒடுக்கப்பட்டோரின் கல்விக்கான*
*இட ஒதுக்கீட்டை எதிர்த்து*
*ஆர்ப்பாட்டம் செய்யும்*
*மனுநீதி வேதத்தைப் பார்த்து*

*பாரதமாதா கண் கலங்குகிறாள்*
*மகாத்மாவின் மனம் புண்ணாகிறது*
*அம்பேத்காரின் ஆழ்மனது*
*மீளாத்துயரில் மூழ்கிக் கிடக்கிறது*

*சுனாமி கொடுத்த சீரழிவைச்*
*சீர்செய்ய முன்னமே,*
*இன்னுமோர் பூகம்பம்*
*உயிர் குடித்து உடல் சிதைத்து*
*வீடுமனை பொருள் அழித்து*
*துன்பத்தில் துயர் கொடுத்து*
*பேரழிவில் மூழ்கி நிற்கும்*
*'ஜாவா' தீவின் அவலங்கள்.*

*கரையோரம் நீண்டு செல்லும்*
*சுனாமிக் குடிசைகளில்*
*தீப்பொறி பற்றிப் பிடிக்கிறது*
*கூரையும் வள்ளம் வலையும்*
*கருகி எரிகிறது*

*கல் வீடுமில்லை*
*கட்டிய 'ஓலைக்கொட்டிலுமில்லை'*
*அரசிடம் கை ஏந்தி நிற்கும்*
*மீனவரின் துயரங்கள்.*

*'அரவாணிகள்' வாழ்வியலில்*
*கொலையுண்ட உடல் ஒன்று*
*பூட்டப்பட்ட ஹோட்டல் அறையில்*
*விசாரணைகள் நீண்டு செல்கிறது,*

*தமக்குத் தாமே தாலி கட்டி*
*தாலி அறுத்து*



*வெள்ளைப்புடவை உடுத்து*
*ஒப்பாரிபாடி இழவு கொண்டாடி*
*ஆண்டு விழாவை நிறைவுசெய்கின்ற*
*உணர்வுள்ள*
*அந்த மானிடர் கூட்டத்துக்கும்*
*அறிவுஒளி கொடுப்பதற்கு*
*அவதரிப்பாரா இன்னொரு 'பெரியார்'?*

*வணிகநோக்கம் தணியாத தாகமென்றும்*
*எழுத்துச்சுரண்டல்*
*தமிழில் இன்னும்தான் வாழ்கிறது*
*எழுத்தாளருக்கு வரவு:*
*'பஸ்' கட்டணமும் கை நட்டம்.*

*புதுச்சொற்களைத் தேடும் திரைப்படக் கவிதைகள்*
*கருத்தாழக் கதையின்றி அலையும் சினிமா*
*அதிபர்கள்*

*நெடும்படம் தடுமாற்றத்தில்*
*தொடர்படம் முன்னேற்றத்தில்*
*தமிழ் நடிகைக்கும் தற்கொலைக்கும்*
*மரபுவழித் தொடர்புண்டு.*

ஒலிவாங்கியைப் பிடுங்கி
வேஷ்டியை மடித்துக்கட்டி
ஆட்சிமன்றத்துள் கோஷ்டிச்சண்டைகள்.

*முன்னேற்றப் பாதையில் நடந்துசெல்லும்*
*உலகமயப் பண்பாட்டின் உணர்வுகள்.*



முத்துராஜா


Niru BRAND®
FOOD PRODUCTS
நிரு பிராண்ட்
வறுத்த மிளகாய்த்தூள்
ROASTED
CURRY (CHILLI) POWDER
POUDRE DE CURRY (ROTIES)
PINEAPPLE JAM
Pure Gingelly Oil
(Sesame Oil)
Kitul Treacle
CHILLI SAUCE
CONDENSED
300ml.
COW GHEE
JACK
SPICY COFFEE
Tel: 416-750-1976 Web:www.niru.com e-mail: info@niru.com

# பரம்பரை வீட்டு வைத்தியம்

***கடந்த இதழ் தொடர்ச்சி***

(29) உடற்பயிற்சி - எமது வாழ்க்கையில் உடம்பை நல்ல நிலையில் வைத்திருப்பதற்கு உடற்பயிற்சி அத்தியாவசியமானது. இந்த உடற்பயிற்சி முற்காலத்தில் மனிதர் அன்றாடம் செய்யும் தோட்டவேலை, விவசாயம் போன்றவற்றால் கிடைத்தது. ஆனால் இன்று எல்லாம் இயந்திரமயமாகி சகல வேலைகளும் கந்தோரில் கணினியின் முன் இருந்து செய்து முடிக்ககூடியதாக இருக்கையில் உடல் உழைப்பே இல்லாது இருப்பதனால் இந்தக்காரணங்களால் உடம்புக்குள் இருக்கும் அத்தனை உறுப்புக்களும் நன்கு செயற்படாது நாளடைவில் செயலிழந்து விடுகின்றன. பற்பல நோய்களும் தோன்றுவதற்கு காரணியாகி விடுகின்றது. உடம்பிலுள்ள தசைகள் நன்கு ஆடி அசைவதால் அந்த உறுப்பு


டாக்டர். சி.வ. பரராஜசிங்கம், Ph.D

Holistic Practitioner (canada)

Nutrition & fitness (Canada)

'யோக சித்தர்' வவுனியா, இலங்கை

Tele. - 416.291.3022

E.Mail-DRVPS@Hotmail.com


பலப்படுகிறது. பலநாட்கள் நடக்காது ஓரிடத்தில் இருந்தால் கால்களின் தசைகள் சுருங்கி சிலநாட்களில் நடக்கமுடியாது போய்விடுவதை கண்டிருப்பீர்கள். இதுபோலவே சகல உறுப்புக்களும் அன்றாடம் நன்கு அப்பியாசப்படாவிடில் செயலிழந்துவிடும். முற்காலத்தில் மூளையால் வேலைசெய்த சித்தர்களும் யோகிகளும் தினம் யோகாசனம் பயின்று தமது உடம்பை நல்ல நிலையில் வைத்திருந்தார்கள். இன்றைய விஞ்ஞான உலகில் நடப்பதற்கே நேரமிருப்பதில்லை, சகலதும் வாகனங்களில் நடக்கிறது. இதனாலேயே உடம்பு கெட்டு பலவித நோய்களும் தோன்றுகின்றன. எனவே தினம் ஏதாவது உடற்பயிற்சி செய்து உடம்பையும் அதன் உறுப்புக்களையும் நல்ல நிலையில் வைத்திருந்தால் நோயின்றி வாழலாம். எதுவித உடற்பயிற்சியும் செய்யாவிடினும் தினம் நிற்காது குறைந்தது அரைமணி நேரம் நடக்க வேண்டும். வெளியே நடப்பதற்கு காலநிலை சரியில்லாவிடில் நாம் இருக்கும் வீட்டினுள்ளேயே நடக்கலாம். நடக்கும்பொழுது முக்கியமாக கவனிக்கவேண்டியது வாயை நன்கு மூடியவண்ணம் மூக்கால் மூச்சை இழுத்து விட்டவண்ணம் நடக்க வேண்டும். அதிக கஸ்டமில்லாது ஆனால் அரைமணி நேரம் நிற்காது நடக்கவேண்டும். இதைத்தவிர ஓரிடத்தில் நிமிர்ந்து இருந்து வாயையும் கண்ணையும் மூடியபடி மூச்சை உள்இழுத்து சில விநாடிகள் உள்ளே வைத்துப்பின் மூச்சை வெளிவிட வேண்டும். இப்படி குறைந்தது 15 முறை செய்யலாம். இதனால் எமது உடம்பிற்கு அத்தியா அவசியமான பிராணவாயு உடம்பிற்கு கிடைத்து மூச்சும் பலப்பட்டு பலவியாதிகளும் நீங்கும். அவை வராது தடுக்கலாம். எமது மனம் ஒரு குரங்குபோன்றது. அது பலவித யோசனைகளிலும் ஈடுபடும்போது உடம்பிலுள்ள தசைகள் இறுக்கமடைந்து அதேநிலையில் இருந்து அந்த இறுக்கத்தால் பல்வேறு உறுப்புக்களும் பாதிக்கப்படுகின்றன. இதைத்தவிர்ப்பதற்கு இந்தச்சுவாசப்பயிற்சி பெரிதும் உதவும். எந்த உடற்பயிற்சி செய்தாலும் உடம்பைத்தளர்த்துவதற்கு இந்த சுவாசப்பயிற்சி அவசியம். எனவே இதை பலரும் தினமும் செய்து ஆரோக்கியமாக வாழவேண்டும்.

(30) உடம்பு மெலிவதற்கு - ஒருபிடி கொள்ளு இரசத்தில் போட்டு இரசம் வைத்து கிழமைக்கு இரண்டு நாட்கள் உணவுடன் சாப்பிட்டால் உடம்பு மெலியும். 'கரற்' ஐ அரைத்து மோரில் கலந்து தினமும் காலையில் குடித்துவந்தால் சிலநாட்களில் உடம்பு பருமன் குறையும்.

வாழைத்தண்டு சாறு, பூசனிக்காய் சாறு, அறுகம்புல் சாறு இவற்றில் ஏதாவது ஒன்றை தினம் சிலநாட்கள் குடித்துவந்தால் உடம்பு மெலியும். கீரை, பொன்னாங்காணி, துவரம்பருப்பு, மிளகு இவற்றைசேர்த்து தினம் கறிகாச்சி உண்டுவந்தால் உடம்பு பருமன் விரைவில் குறையும். உண்ணும்பொழுது வானொலி, தொலைக்காட்சி இப்படியானவற்றில் சிந்தனையைச் செலுத்தாது உணவை நன்கு ருசித்து உண்டால் அதிக உணவு



சாப்பிடமுடியாது. உடம்பு பருமனும் குறையும். சாப்பிடும்பொழுது ஒரு கிளாசில் சுட்டு ஆறியநீரை வைத்துக்கொண்டு அடிக்கொருதரம் குடித்துக்குடித்து உணவு உண்பதும் உடல் பருமனைக்குறைப்பதற்கு உதவும். உணவு, சிற்றுண்டி உண்ட பின்பும் குடிக்கக்கூடிய அதிகசூட்டுடன் ஒரு கிளாஸ் தண்ணீர் குடிப்பதும் உடல் எடையைக்குறைக்க உதவும். சாப்பிடுவதற்கு சற்று முன் ஒலிவ் எண்ணை ஒரு மேசைக்கரண்டி குடித்துவிட்டு அரைமணிநேரம் கழித்து உண்பதும் எடையைக் குறைக்கும். வெள்ளைப்பூண்டுச் சாற்றுடன் தண்ணீர்கலந்து சாப்பிட்டு பின் உணவு அருந்துவதும் எடைகுறைக்க சிலர் கையாளும் முறை. வில்வம் இலைக்கசாயம் உடல் பருமனைக் குறைக்கும். வாழைத்தண்டுச்சாறு உடம்பை மெலியச்செய்வதுடன் சிறுநீரகத்திற்கும் நல்லது. பொதுவாக உப்பையும், உணவில் சீனியையும் குறைத்தால் உடம்பு மெலிய பெரிதும் உதவும்.

கட்டாயம் தினம் உடற்பயிற்சி, யோகாசனம் உடம்பை நாற்புறமும் வளைத்தல் வியர்வை வர ஏதாவது வேலை செய்தல் உடல் பருமனைக் குறைக்கும். காலையில் எலுமிச்சம்பழச்சாறு குடிப்பதும். வாழைத்தண்டு கறிவைத்து உண்பதாலும் உடல் பருமன் குறையும். மாலையில் ஒரு கிளாஸ் சுட்டு ஆறிய நீரில் இரண்டு தேக்கரண்டி தேன் கலக்கி குடித்து வந்தால் நல்ல தூக்கம் வருவதுடன் உடம்பும் மெலியும். கலியாணமுருங்கை இலைச்சாற்றை பிழிந்து அதில் சீனாக்கற்கண்டு சேர்த்து காச்சிப்பத்திரப்படுத்தி வைத்து அதில் ஒரு அவுன்ஸ் ஒரு கிளாஸ் வெந்நீரில் கலக்கி குடித்து வந்தமால் விரைவில் உடம்பு மெலியும்.

(31) உடல் பருப்பதற்கு- உடம்பு மெலிந்திருப்பவர்கள் நாள்தோறும் செம்மறி ஆட்டுப்பால் குடித்துவந்தால் உடல் பருமனாகும். ஊறவைத்த கொண்டைக்கடலையை காலையில் சாப்பிட்டு வந்தால் உடம்பு பருக்கும். உழுத்தம்பருப்பு, கடலைப்பருப்பு, அவரை, நெய் மோர் இவைகளும் உடம்பு பருமனாக உதவும். தினம் உடற்பயிற்சியும் இந்த உணவுகள் உடம்பில் சுவற உதவும்.




MOHAN

HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



Dr. J. Mohan

D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

**TEL: 416-298-7537 / 416-291-3022**

5200 Finch Ave, East Suite 210
(At Middle Field), Scarborough, M1S 4Z4



# பயிற்சி வகுப்புக்கள்

- **Cake Making**
- **Cake Decorating**
- **Cookery**
- **Bridle Makeup**



இலங்கையில் **Cake Making & Decorating,** இலங்கை, இந்தியா, சீனா, மலேசியா போன்ற நாடுகளின் Cookery & Bridle Makeup பயின்று பாண்டித்தியம் பெற்று இலங்கை, இந்தியா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் பல நூற்றுக்கணக்கானவர்களுக்கு அவற்றைப் பயிற்றுவித்து தனக்கென தனிமுத்திரை பதித்த திருமதி. சாந்தா ஜெயராஜா அண்மையில் இந்தியா, ஜேர்மனி, இங்கிலாந்தில் பயிற்சி வகுப்புக்கள் நடத்திவிட்டு கனடாவிற்கு வருகிறார்.

Toronto இல் இவரது பயிற்சி வகுப்புகள்

**காலம்:** ஆகஸ்ட் 16ஆம் திகதி முதல் 3 வார காலங்கள்

**இடம்:** Daily Needs Party Hall

2541 Pharmacy Ave. Pharmacy & Finch

**குறைந்த காலத்தில் நிறைந்த பயிற்சி பெற அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் உங்கள் பெயர்களைப் பதிவு செய்ய முந்துங்கள்.**

*அனுமதிக்கு அழையுங்கள்*: 905.773.8274
416.527.0429


நகைச்சுவைத் தொடர் 152

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்

## இஸ்ரேல் லெபனான் சண்டை

வெளிநாட்டவர்கள் குறிப்பாக
ஆசியா ஐரோப்பா அமெரிக்கா கனடா
பல நாட்டவரும் திக்குத்திசை தெரியாமல் திணறுகின்றனர்.
அமெரிக்கா கப்பல் விமானங்களை அனுப்பி தனது மக்களை திருப்பி அழைத்துள்ளது
கனடாவும் இந்தியாவும் மற்றும் நாடுகளும் அப்படித்தான்.
ஆனால் இலங்கைக்கு ?..





பல கப்பல்கள் செல்கின்றன.
இலங்கை அரசு வெளிநாடுகளில் தமிழர்களுக்கு
எதிரான போருக்கான ஆயுதங்களுடன் ....

செல்போன் கொம்பனிகள் வரவர பிசியாகிவிட்டன.
வீடுகளில் குடும்பங்கள் நிற்பது குறைவு
எந்தப்பார்க்கில் எந்த ஏரியாவில் எந்த ஊரின் ஒன்றுகூடலோ?...
உலகர் குழுவினர் வீடு ஒரே அமைதி. உலகர் படித்த பாடசாலைகள் ஒன்றா? இரண்டா?.
ரியூட்டரிகள் எத்தனை. அத்தனை ஒன்றுகூடல்கள், ஆண்டுவிழாக்களிலும் உலகர் இல்லையென்றால்
அங்கு கலகலப்பேயிருக்காது.

ஆனால் கறுப்பு யூலை தினத்தன்று இலவசமாக பஸ்சில் ஏறி ஒருவாறு ரொரன்ரோ மத்திக்கு போய் மனம் சோர்ந்துவிட்டார்
என்னினமே என் சனமே என்னை உனக்கு தெரிகிறதா என்ற சங்கீதபூசணம்
திரு. பொன் சுந்தரலிங்கம் அவர்கள் பாடிய எழுச்சிப்பாடலுக்கு நடன-
மாடியதை வேற்று இனத்தவர் ரசிக்க




மண்ணை என்றும் நேசிப்பவன்
அதனால் மரணத்தையே யாசிப்பவன்
என்ற வரிகளால் சிலர் கண்களில் நீர் ததும்ப
உலகர் சால்வையால் தனது கண்ணீரைத் துடைத்துக்கொண்டார்.

என்ன அகோர வெய்யில் என்றபடி வந்தா செக்கண்ட்புளோர் செல்லம்மா
கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரப்பிள்ளை
1872 ஆகஸ்ட் மாதம் 5ம் திகதி பிறந்து ஆங்கிலேயரையே எதிர்த்து கப்பலோட்டிய தமிழன்.
ஆனால் நடிப்பின் மூலம் அவரை எம் கண்முன் கொண்டுவந்து எம் நினைவில் வைத்தவர்

வாழ்ந்தவர் கோடி மறைந்தவர் கோடி
மக்கள் மனதில் நிற்பவர் யார்?
பகை கொண்ட உள்ளம் துயரத்தின் இல்லம்
தீராத கோபம் யாருக்கு லாபம்
உலகுருக்கு பழையபாடல்கள் எல்லாம் அத்துபடி

லெபனான் இஸ்ரேல் மோதலில் லெபனானிலுள்ள
ஐக்கிய நாடுகள் சபை உறுப்பினரே கொல்லப்பட்டுள்ளனர்.
என்ற செய்தி வானொலியில் ஒலிபரப்பாகிக்கொண்டிருந்தபொழுது



வழக்கமாகப் பார்க்கும் ஆனந்தம் நாடகத்தொடரைக்கூட
ஆனந்தமின்றி நிறுத்திவிட்டு
உலகர்மேல் சீறிப்பாய்ந்தா ஆட்டிலறி அன்னம்மா
உலகண்ணை உலகத்திலை ஆர் சண்டைப்பிடிச்சாலும்
விலகுப்பிடிக்கிறவை ஐ.நா சபை
அவையையே மதிக்காமல் குண்டு போடுறாங்களெண்டா
அதுதானே என்று பக்கப்பாட்டுப்பாடினா செக்கண்புளோர் செல்லம்மா
ஐ.நா சபையே என்ன செய்யிறதெண்டு தெரியாம திக்குமுக்காடீனம்
எந்தமுகத்தோடு மற்றய நாடுகளுக்கு சென்று சமாதானமா
இருங்கோவெண்டு சொல்லுவினம் என்று மூச்சுவிடாமல் பேசிமுடித்தா
செக்கண்புளோர் செல்லம்மா
ராசம்மாவுக்கு சிரிப்பதா விடுவதா எனதெரியாமல் எழுந்து ரீ போட்டுக்கொண்டுவாறன் என்றபடி
உள்ளே போக ரூபனும் ரூபியும் அறையில் இருந்து ஓடிவர
ஏன் செல்லம்மா அதுக்கு கத்துறாய் என அடக்க
உலகர் தனக்குள் சிரித்தார்
இணுவில் இளவாலை இருபாலை
இரணைமடுவில் நடந்த பல விடயங்கள் தெரியாதவர்களுக்கு இன்ற இஸ்ரேல் பிரச்சினையும்
....


சோதனை மேல் சோதனை போதுமடா சாமீ...
மாமா! காஞ்சு.. போன ..பூமியெல்லாம் ....
வற்றாத நதியைப்பார்த்து ...ஆறுதலடையும்.
அந்த நதியே காஞ்சுபோயிட்டா....




**யோகா சோதிடம்**

- கிரகப் பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

416-299-8361




**QUICK IMMIGRATION SERVICES**





To Visit Canada


To Work in Canada


To Study in Canada


To Settle in Canada


To Seek asylum


To Represent before IRB

**Contact: Dheena Subramanian,**
Certified Canadian Immigration Consultant
(CSIC ID #: M063695)
**1200 Markham Road, Suite #:105, Toronto ON Canada**
**Tel: (416) 834 8298 Fax: (416) 283 3567**
E-Mail: dheena_subramanian@yahoo.com
Website: www.allcanadaimmigration.ca

**KJN Home Appliances**

**Sales & Service**

**GRAND OPENING**

**We Supply:**
- Fridges
- Washer & Dryer
- Stoves
- Dishwasher
- Much More...





**Very Low Low Low Prices!!!**

**We Repair All Major Household Appliances**

*For your needs call Shiva*
Bus: 416.282.9235
Cell: 416.627.6194
www.kjnappliancess.com
1345 Morningside Ave. Unit #5 (Morningside & Sheppard)


# விலைமதிக்க முடியாத கொடை

## ஓடும் நீர் உறைவதில்லை 17

நாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு செயற்பாடும் நேரம் பணம் என்ற இருமுக்கிய மூலங்களுடன் தொடர்புபட்டதாகவே அமைகின்றது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இந்த மூலங்களில் ஒன்றை இழப்பதன் மூலமே மற்றையதைப் பெற்றுக்கொள்ளமுடியும். இந்த அடிப்படையில்தான் ஒருவரது பொருளாதார நிலைமை கணிக்கப்படுகின்றது. ஒரு தொழில் அதிபர் - உரிமையாளர் தனது பணத்தை இழப்பதன் மூலம் தொழிலாளிகளின் நேரத்தைப் பெறுகின்றார். அதே போன்று தொழிலாளியும் தனது வருமானத்தைப் பெறுவதற்குத் தனது நேரத்தை விற்பவராகின்றார். எனவே வாங்கல் விற்றல் என்ற அடிப்படையில் பரிமாறப்படுவது நேரமும் பணமுமாகும். இங்கே பணம் எனும் போது ஒரு நாட்டின் சட்ட நாணயம் மட்டுமல்ல பணப்பெறுமதியைக் கொடுக்கும் அனைத்தும் பணம் என்ற ரீதியில் கருதப்படல் வேண்டும்.

நமது நேரத்தை அல்லது பணத்தை மற்றவர்களது நன்மைக்காக நாம் பயன்படுத்துவது வாழ்வியலில் தவிர்க்கப்பட முடியாதது. இவ்வாறு பயன்படுத்தப்படும் நேரமும் பணமும் எத்தகைய உடனடி விளைவுகளை ஏற்படுத்தும் என்பதில் ஒவ்வொருவரும் மிக விழிப்பாகவும் இருக்கினறோம். உதாரணமாக ஒரு தொழிலைத் தெரிவுசெய்யும் போது நாம் விற்க இருக்கும் நேரத்திற்கேற்ப அந்த நேரத்தின் பெறுமதிக்கு ஒரு விலையை நிர்ணயித்து அந்த விலை கிடைக்குமாயின் அந்தத் தொழிலை ஏற்கின்றோம். மாறாக தரப்படும் விலை குறைவாக இருக்குமாயின் அந்த வேலையை நிராகரிக்கின்றோம். இதே போன்றுதான் பணத்தை நாம் செலவு செய்கின்றபோதும் செலவு செய்கின்ற பணத்திற்குப் பதிலாக கிடைக்கும் நேரம் அல்லது பொருள் அப்பணத்தின் பெறுமதிக்குச் சமமாக அல்லது மேலாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். எனவே நேரம் பணம் என்பவற்றின் மூலம் ஏற்படுத்தப்படும் நடவடிக்கை கள் கொடுப்பவருக்கும் பெறுபவருக்கும் அதாவது முற்றிலும் முரண்பாடான எதிர்பார்ப்புக்களுக்குள் ஒரு சமநிலையை ஏற்படுத்துவதன் மூலமே நிறைவேற்றப்படுகின்றன.

கொடை எனும் போது ஒருவர் தனது பணத்தை அல்லது பணப்பெறுமதியுடைய ஒரு பொருளைப் பிரதிபலன்பாராது இன்னொருவருக்கு கொடுப்பதைக் குறிக்கும். அதாவது கொடுப்பதில் இணைக்கப்பட்டுள்ள மனமகிழ்ச்சி ஒன்றைத் தவிர வேறு எதையும் பிரதிபலனாக எதிர்பாராமல் பணம் அல்லது பணப்பெறுமதியுடைய ஒன்றை மற்றொருவருக்குக் கொடுப்பதை நாம் கொடை என்கின்றோம். இந்தக் கொடையை நல்ல நோக்கத்திற்காகக் கொடுப்பதாயும் நல்ல நோக்கத்திற்காகப் பயன்படுவதாயும் கருதப்படுவதால் நன்கொடை எனக் கூறப்படுகின்றது. இங்கே மிக முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விடயம் என்னவெனில் நேரம், பணம் ஆகிய இரு மூலங்களில் பணம் என்பதே நன்கொடை என்ற பகுதிக்குள் அடக்கப்படுகின்றது.




KG Master
416.725.5112


இவ்வுலகில் வாழும் எல்லா உயிரினங்களுக்கும் மனித இனம் உள்ளடங்கலாக சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள விலை மதிக்கமுடியாது ஒன்று தான் நேரம். இந்த நேரம் அதன் பயன்பாடு, பயன்பாட்டின் விளைவு என்பன ஒவ்வொருவருக்கும் வேறுபட்டதாகவே அமையும். அதாவது நேரமானது சமமாகப் கொடுக்கப்பட்டிருந்தாலும் அதன் பயன்பாடு இரு நபர்களுக்கிடையில் ஒரேமாதிரியாக அமைவதில்லை. இந்த வேறுபட்ட பயன்பாட்டு முறையே ஒருவரது வாழ்க்கைத்தரத்தை, வாழ்வியல் முறையை மற்றவரில் இருந்து வேறுபடுத்துகின்றது. எனவே ஒருவரது வாழ்க்கைத்தரத்தை நிர்ணயிப்பது நேரம் தான் என்பதை மறந்துவிடக்கூடாது.

இங்கே நாம் ஒருவருக்குக் கொடையாகக் கொடுக்கும் பணம் அல்லது பொருள் அதன் பெறுமதியின் அடிப்படையிலேயே அளவிடப்படுகின்றது. கொடுக்கப்படும் பணத்தை அல்லது கொடுக்கப்படும் பொருளினை வாங்குவதற்குச் செலவு செய்த பணத்தை உழைப்பதற்குச் செலவு செய்த நேரத்தை நாம் கவனிப்பதேயில்லை. உண்மையில் நாம் கொடையாகக் கொடுப்பது நமது நேரத்தையே என்பதை உணருவதில்லை. ஏனெனில் வருமானத்தின் மூலாதாரமாக இருந்த நேரம் பணம் எனும் கருவிக்கு மாற்றப்பட்டபின் அந்த மூலாதாரம் மறைக்கப்பட்டும், மறக்கப்பட்டும் விடுகின்றது. இதனால்தான் ஒருவர் தனது நேரத்தை இன்னொருவருக்காகச் செலவிடும்போது அதாவது பிரதிபலன்பாராமல் செலவிடும்போது அது ஒரு கொடையாகக் கருதப்படுவதில்லை. சில சந்தர்ப்பங்களில் கொடுக்கப்பட்ட நேரத்தின் தேவைக்கான சூழ்நிலையைப் பொறுத்து நன்கொடையாக இல்லாமல் நன்றிக்கடனாக மாற்றமடைகின்றது. உதாரணமாக ஒரு பிறந்தநாள் விழாவில் நீங்கள் செலவிடும் மூன்று மணித்தியால நேரம் ஒரு நன்றிக் கடனாகக் கருதப்படுவதிலும் பார்க்க ஒரு குடும்பத்தில் இடம்பெற்ற துக்ககரமான சம்பவம் ஒன்றில் பயன்படுத்தப்படும் நேரம் அந்த நேரத்தைப் பெற்றவர்களுக்கு ஒரு நன்றிக் கடனாக அமைகின்றது. எது எப்படி இருப்பினும் கொடுத்தலும் வாங்குதலும் வியாபாரம். ஆனால் பிரதிபலன்பாராத கொடுத்தல் தான் கொடை.

நடைமுறையில் பிரதிபலன் பாராத கொடுப்பனவு என்பது ஒரு குடும்ப அமைப்பில் மட்டுமே முற்றுமுழுதாகக்காணப்படும். கணவன், மனைவி, குழந்தைகள் என்ற ஒன்றிணைப்பில் ஒருவர் மற்றவருக்ககாக செலவிடும் நேரம் எந்த ஒரு எதிர்பார்ப்பையும் பிரதிபலனாகக் கொண்டிருப்பதில்லை. நிகழ்காலத்தின் ஜதார்த்தமும் எதிர்காலம் பற்றிய கனவும் ஒரு குடும்பத்தின் அத்திவாரமாக அமைவதால் அக்குடும்ப அங்கத்தவர்களது ஒன்றிணைந்த, ஒருமனதான செயற்பாடுகள் தனிப்பட்ட நலன்களைப் புறந்தள்ளி இடம்பெறுவது இயல்பானதே. ஒரு குடும்ப அமைப்பில் அதிமுக்கியமான விடயம் என்னவெனில் ஒருவர் மற்றவருக்காக வாழ்வதே. அதாவது கணவன் மனைவிக்காகவும், மனைவி கணவனுக்காகவும், இருவரும் சேர்ந்து குழந்தைகளுக்காகவும் எல்லோரும் சேர்ந்து சமூகநலனுக்காகவும் வாழ்வதே ஒரு மகிழ்ச்சிகரமான, திருப்திகரமான குடும்ப வாழ்க்கையாகும். அதாவது ஒரு குடும்ப அமைப்பில் ஒருவர் மற்றவரின் நலன்களுக்காகத் தன்னை அர்ப்பணிக்கும் மனப்பக்குவத்தை உருவாக்கியவுடன் அது கோவிலாக மாறிவிடும். கோவிலாக மாறிய குடும்பம் ஒன்றில் ஒருவர் மற்றவரால் பூஜிக்கப்படுபவராகவும், பூஜிப்பவராகவும் காணப்படுவர்.

ஒரு மகிழ்ச்சிகரமான குடும்பத்தின் அடிப்படை உளவியல் சார்ந்ததே. அதாவது பொருளியல் சார்ந்த பகுதி சிறிதாகவும் உளவியல் சார்ந்த பகுதி மிகப் பெரிதாகவும் காணப்படும். இருப்பதைக் கொண்டு சிறப்புடன் வாழும் பக்குவம் குடும்பத்தின் ஆணிவேராக அமைந்திருக்கும். இல்லாத ஒன்றிற்காக இயலாத காரியத்தில் ஈடுபட்டு அல்லற்படும் எண்ணிலடங்காத குடும்பங்களுக்கு இவர்கள் ஒரு வழிகாட்டி. வாழ்வுக்காக வாழ்பவர்களேயன்றி வாழ்வதற்காக வாழ்பவர்கள் அல்லர். தன்னலத்தைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு குடும்ப நலமே குறிக்கோளானவர்கள் இவர்கள்.

இவர்களது மகிழ்ச்சிக்கு அடிப்படை என்ன என்பதை ஆராய்ந்து பார்த்தால் இவர்கள் அனைவரும் கொடையாளிகள் என்பதே. கணவன் மனைவி இருவரிலும் சிறந்த கொடையாளி யார் என்று தெரிவு செய்யமுடியாத அளவுக்குச் சமமானவர்கள். இவர்களின் கொடை என்னவெனில் விலை மதிக்கமுடியாத நேரம் தான். குடும்பத்தின் மொத்த நலன் கருதிய நேரத்தின் பயன்பாடு வருமானம் ஒன்றை உருவாக்கும் நேரம் தவிர்ந்த மிகுதி நேரத்தைப் பிரதிபலன்பாராமல், சலிக்காமல் ஒருவர் மற்றவருக்காகக் பயன்படுத்துவது, எதிர்காலச் சந்ததியின் சிறப்பான வாழ்க்கைக்கு வழிவகுக்கும் விடயங்களில் பயன்படுத்துவது, தன்னலமற்ற சேவை மனப்பாங்குடன் செயற்படுவது என்பன சில.

ஆம் வாசகர்களே, ஒரு மகிழ்ச்சிகரமான குடும்ப வாழ்க்கையின் அடிப்படை தன்னலமற்ற சேவைதான். ஒரு தாயின் தன்னலமற்ற சேவைக்கு நிகராக உலகில் எதுவும் இல்லை. கணவன் மனைவிக்கும் மனைவி கணவனுக்கும் இருவரும் சேர்ந்து குழந்தைகளுக்கும் தாயாக மாறுங்கள். சேவைசெய்யும் மனப்பாங்கு தானாக உருவாகும். சேவையின் மூலப்பொருள் நேரம். இந்த விலை மதிக்கமுடியாத நேரத்தைச் சேவையாக மாற்றி ஒருவர் மற்றவருக்கு அள்ளிக் கொடுங்கள். இந்த விலைமதிக்கமுடியாத கொடையால் அன்பு பெருகும், ஆனந்தம் கூத்தாடும், பண்பும் பலமும் பொருந்திய பாதை ஒன்றை எதிர்காலச் சந்ததி யினருக்கு உருவாக்குவ தாகவும் அமையும்.






கல்வி = அறிவுத்திறன் + பண்புடைமை

Education = Intelligence + Character


KG Master
(Over 25 years of experience)
(416) 291-2611
(416) 725-5112

Memory Power, Concentration
Listening Skill, Reading Skill
Goal Setting, Team Work
Performance, Presentation Skill
Time Management

Training Classes for children 7 to 16 years old

Self-Confidence, Self-Image
Self-Discipline, Patience
Obedience, Positive Thinking
Winning Attitude,
Taking Responsibility
Leadership Qualities





YARL WINDOW

BLINDS & DRAPERY

BLINDS DRAPERIES AND SHUTTERS

- Venetian Blinds
- Pleated Shades
- Vertical Blinds
- Cellular Shades
- Roller Shades

FREE ESTIMATE



உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இன்றே அழையுங்கள்

விபரங்களுக்கு: என். செல்வம் - 905.201.7733
416.806.5397
5210 Finch Ave., E. Unit #3 (Middlefield & Finch) Scarborough, ON



JENNY AUTO SALES ***INC.***



***(Kennedy & Steeles)***

கடந்த பத்து வருடங்களாக Jenny Auto sales, Markham மூலம் பல்லின மக்களின் நல் ஆதரவைப்பெற்ற Anton தற்போது வீடு விற்பனைத்துறையிலும் முன்னணியில் திகழ்கின்றார்.

| | | | |
|---|---|---|---|
| 2002 | Honda Accord | - | 13,000.00 |
| 2001 | Toyota Corolla | - | 8,500.00 |
| 2003 | Toyota Corolla | - | 10,500.00 |
| 2002 | Honda Civic | - | 8,995.00 |
| 2002 | Honda RV | - | 14,995.00 |
| 1999 | Honda Civic | - | 7,500.00 |
| 1996 | Toyota Corolla | - | 3,995.00 |
| 1997 | Honda Accord | - | 5,995.00 |
| 1998 | Toyota Corolla | - | 6,500.00 |
| 1998 | Toyota Camry | - | 6,995.00 |
| 1997 | GM Savana | - | 4,500.00 |
| 2000 | Dodge Caravan | - | 4,500.00 |

இன்னும் பல நல்ல வாகனங்கள் எம்மிடம் உள்ளன. We do vehicle appraisals

Anton: (416) 575-5055 Rajah: (905) 470-0048

Office: 4440 Steeles Ave., East, Markham, ON, L3R 0L4

# பொய் அல்லது பொய் என்னும் பேய்

என் வாழ்வில், சில சமயங்களில் நான் நேர்மையாக நடக்கவில்லை எனும் உண்மையை இன்று நான் ஒப்புக்கொள்கிறேன்.

ஆமாம்! சிலர் பெரிய பொய்களைக் கூசாது கூறுவார்கள். சிலர், சின்னச் சின்ன பொய்களைச் சொல்வார்கள். நல்ல மனிதர்கள் கூட சந்தர்ப்பத்திற்குகந்த மாதிரி பொய்களைச் சில சமயங்களில் சொல்வார்கள். துஷ்டர்கள் மற்றவர்களைப் பாதிக்கும் பெரிய பொய்களை மனச்சாட்சியின்றி உரைப்பார்கள். சில சமயங்களில் வெறும் முசுப்பாத்திக்குக் கூட சிலர் பொய் பேசுவார்கள். தாம் சொல்வதையும் செய்வதையும் நிரூபிக்க சிலர் பொய்யை உபயோகிப்பார்கள். நெடுங்காலமாகப் பற்பல பொய்களைச் சொல்லும் சிலர், எது உண்மை என்பதையே சிலவேளை மறந்து விடுவார்கள். சிலர் தமக்குத் தாமே பொய் சொல்லித்தம்மையே ஏமாற்றிக்கொள்வார்கள். சிலர் பிறருக்கு மட்டும் பொய் உரைப்பார்கள். சிலவிதமான பொய்களைக் கூசாமல் சொல்லலாம். சிலவற்றைச் சொல்லக் கூடாது எனப்பலர் நினைக்கலாம். ஆனால், ஒரு பொய் என்றால் அது நிச்சயம் பொய்தான். யார் சொன்னாலும், எதற்காகச் சொல்லப்பட்டாலும் பரவாயில்லை. பொய் என்றால் பொய்தான். அன்பானவர்களே! தயவு செய்து இதை வாசிப்பதை சற்று நிறுத்தி இப்போ உங்களையே நீங்கள் சுய அலசல் செய்து உங்கள் குறைபாடுகளைப் பற்றிய உங்கள் விழிப்புணர்வைத் தூண்டி விடுங்கள். கடந்த மூன்று வருடங்களாக இத்தொடரை வாசிக்கும் நீங்கள் ஒவ்வொருவரும், உங்கள் மனங்களைக் கண்காணித்து, ஆசைகளுக்கு வரம்பு கட்டப் பழகியிருப்பீர்கள் என நம்புகிறேன். எங்கள் குற்றங்குறைகளை அடையாளங்கண்டு, அவற்றைக் கைவிட்டு எம்மை மாற்றிக் கொள்ள எம்மால் மட்டும்தான் முடியும். மற்றவர்களால் ஒரு போதும் எம்மைத் திருத்த முடியாது. நாம்தான் எம்மைத் திருத்திக் கொள்ள வேண்டும். மாற்றம் இல்லையென்றால், வாழ்வில் வளர்ச்சியும் இல்லை என்பதை மறந்து விடாதீர்கள். நீங்கள் மாறாவிட்டால் உங்கள் பிரச்சினையும், நிச்சயம் தீராது.

நாம் சிலவேளைகளில் எம்மைப் பாதுகாத்துக் கொள்ளப் பொய் சொல்ல வேண்டி வருகிறது. அல்லது ஏதாவதுதொன்றை மூடிமறைக்க நாம் பொய் சொல்கிறோம். மற்றவர்களின் உணர்வுகளை நோகடிக்காதிருக்க பலர் பொய்யுரைக்கிறார்கள். பொய் சொல்வது பயத்தின் அறிகுறி. மற்றவர்களைக் கட்டுப்படுத்தி அதிகாரம் செலுத்தவும் பொய் உதவுகின்றது. நீ உண்மையை மறைத்து, அதைத் திரித்து மாற்றுவது..., உனது தாக்கத்தால் மற்றவர்கள் எப்படிச் செயற்படுவார்கள் என்பவை நிச்சயம் பாதிக்கும். எப்போதாவது நீ ஒரு பொய் சொல்லியிருந்தால், அதன் நினைவு அடிக்கடி தோன்றி, எவ்வாறு உன்னை வாட்டிப் பாதிக்கும் என்பது உனக்கு நன்கு தெரியும். உனது பொய்யை யாரும் கண்டுபிடித்து விடுவார்கள் எனும் இடைவிடாத அச்சத்துடனேயே நீ வாழ்வாய். அப்படி நீ பொய் சொன்னது வெளிவந்துவிட்டால், அதை மறைக்க கட்டாயம் நீ இன்னும் வரிசையாகப் பொய்கள் சொல்வாய். உனக்கு விருப்பமில்லாவிட்டாலும் பொய்சொல்ல வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்படுவாய்.

உனக்கு நீயே பொய் சொல்வது எப்படி? உனது வாழ்வில் எங்கெங்கெல்லாம் பொய்கள் இருக்கின்றன. எதற்காக நீ இவ்வளவு பயப்படுகிறாய்? யாரைக் கட்டுப்படுத்த முயல்கிறாய். நீ இப்போதிருப்பதை விட உயர்ந்த நிலையில் இருக்கிறாய் என மற்றவர்களை நம்ப வைப்பதற்காகப் பொய் சொல்கிறாயா? உன்னைப் பாதுகாத்துக் கொள்ள உனக்கு வேறு வழியில்லை என்பதால் பொய் உரைக்கிறாயா? அல்லது கோபித்துக் கத்தும்போது, நீ சொல்வதையெல்லாம் நிரூபிக்கப் பொய் சொல்கிறாயா? பொய் கூறுவது ஒரு செயற்பாடாக இருக்க வேண்டியதில்லை. வாயால் மட்டும் பேச்சளவில் சொல்லப்படும் பொய்களும் உண்டு. பொய் என்றால் பொய்தான். நல்ல பொய் என்று ஒன்று இல்லை. பொய் பேச வேண்டிய கட்டாயமும் அவசியமும் ஒருபோதும் எழ வேண்டியதில்லை. நீ சொல்லும் ஒவ்வொரு பொய்யும் உன் ஆன்மாவின் வளர்ச்சியைப் பாதித்து உன் சுயமதிப்பை தாழ்த்திவிடும் என்பதை மறக்காதே.

## ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 82

நீ சொல்லும் சின்னச் சின்ன பொய்களின் தாக்கத்திலிருந்து தப்பிவிடலாம் என நினைத்திருக்கலாம். அல்லது உனக்கு நீயே சொல்லும் பொய்கள், பொய்கள் தான் என்பதை இன்றுவரை நீ ஒப்புக்கொள்ளாது இருந்திருக்கலாம். பொய்களைக் கைவிட்டு உண்மையை, முழு உண்மையையும் மட்டும் உனக்கும், உன்னைப்பற்றியும், மற்றவர்களுக்கும் சொல்ல இன்று முதல் உறுதி பூண்டு சத்தியவிரதம் எடுத்துக் கொள். இதுவரை கூறிவந்த சிறுசிறு பொய்களையெல்லாம் வரிசைப்படுத்தி நான் ஏன், எதற்காக இவ்வாறு பொய் சொல்லி எதைச் சாதிக்க முயற்சிக்கிறேன்? நான் கூறும் பொய்கள் என்னிடமுள்ள எதை மூடி மறைக்கின்றன? என் வாழ்வில் நான் எப்போதும் நேர்மையாக நடக்காததற்கு நான் முன்வைக்கும் சாக்குப்போக்குளைப் பற்றி உண்மையாகச் சிந்தித்து அலசி என்னை மாற்றிக் கொண்டு முன்னேறிட இன்று முதல் நான் முயற்சி செய்வேன். என்னைப் பற்றிய சில அந்தரங்க விடயங்கள் மற்றவர்களுக்கு தெரிய வரக்கூடாது என்பது எனது விருப்பம் எனும் உண்மையை ஒப்புக்கொள்ள இன்று நான் உடன்படுகிறேன்.

கோழைகள் திருமணம் செய்யக் கூடாது. உனது மனிதத்தின் சகல பலவீனமான பகுதிகளையும் பயமின்றி இன்னுமொரு மானிடப்பிறவி முன் வெளிப்படுத்த ஆயத்தமுள்ளவனாக, திடமான தைரியம் நிறைந்தவனாக முகமூடிகளின்றி நிற்கக் கூடியவனாக நீ இருக்கவேண்டும். உனது பலம் வாய்ந்த சக்திகளையும் பலவீனங்களையும் நீ உணர்வதுடன், உனது தாரமும் உணரக்கூடிய வகையில் உன்னை முழுமையாக வெளிப்படுத்தித் திறந்து நீ காட்ட வேண்டும். உனது நம்பிக்கைகளை நிலை நாட்டக்கூடிய சக்தியுடன், மற்றவருக்கு விட்டுக் கொடுத்து சமாதானமாகும் மனப்பான்மையும் உனக்கு நிறைய இருக்க வேண்டும். நீ யார் என்பதை முழுமையாக நீ புரிந்தமாதிரி, உனது தாரமும் தன்னைத் தானே புரிந்து கொள்ளச் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும். உன்னைப் பற்றி உனக்குப் புரியாத, நீ மறந்த, நீ இல்லை என மறுக்கும், தெரிந்து கொள்ள விரும்பாத விடயங்களை நீ அடையாளங்கண்டு ஒப்புக்கொள்ள நீ ஆயத்தமாயிருக்க வேண்டும். திருமணத்தில் இன்னொருவருடன் நீ இணைவது ஒரு தெய்வீகமான, புனிதமான பந்தம். சத்தியமே தெய்வீகம். ஆகவே தம்பதிகள் கட்டாயம் ஒருவருக்கொருவர் உண்மையாக நடக்க வேண்டும். தாம்பத்யம் அந்தரங்கமானது. அது புனிதம் நிறைந்த உறவு. இருவரும் புதியதோர் பிறப்பு எடுக்கும் வாய்ப்பினைத் திருமணம் தம்பதிகளுக்கு அளிக்கின்றது. வளர்ச்சியடையாத, அல்லது குறைவாக வளர்ச்சியடைந்த உனது பகுதிகளை நீ அடையாளங்கண்டு ஒப்புக்கொள்ளும் போது, உனது போலித்தனங்கள் யாவும் அகன்று உனது சுயரூபம் பிறந்து பிரகாசிக்கின்றது. நீ எப்படி வளர்ச்சியடைகிறாய். எந்தெந்தப் பகுதிகளில் எப்படியெப்படி நீ இன்னும் வளர வேண்டும் என உன்னில் அக்கறையுள்ள உறவுகள் உனக்குச் சொல்லி உன்னை ஊக்குவித்து உதவுவார்கள். உறவுகள் உன்னில் இப்படிக் குற்றங்குறைகண்டு குத்திக் காட்டுவது உனக்குப் பிடிக்காமல் இருக்கலாம். ஆனால் உண்மை என்ன தெரியுமா. உன் உறவுகள் இப்படிச் செய்வது நீ குணமடைய / குற்றங்குறைகளை நிவர்த்தி செய்ய உதவுகின்றது. உனது உண்மையையும் சக்தியையும் மீண்டும் பெற்றிட உனது உறவுகள் உதவுகின்றமாதிரி, உனது செயற்பாடுகளும் அவர்கள் குணமடைய உதவும் என்பதை மறந்துவிடாதே.

உனது அச்சங்கள், குறைபாடுகள், பலவீனங்களை வெளிப்படுத்த இன்றுவரை நீ பயப்பட்டிருக்கலாம். அக்கறையுடன் உன்னை நேசிக்கும் உனது உறவுகளுக்கு உனது உண்மையான உணர்வுகளை வெளிப்படையாக கூற உறுதி எடுத்துக் கொள். உனது பூரண வளர்ச்சிக்கு உதவக்கூடிய சந்தர்ப்பத்தை உன்னை நேசிக்கும் உனது உறவுகளுக்குக் கொடு. திருத்தப்பட வேண்டிய குற்றங்குறைகள் என்னிடம் நிறைய இருக்கின்றன. எனது குற்றங்குறைகளை ஒப்புக்கொண்டு என்னை நானே நேசித்து என்னை மாற்றி குணமாக்கும் முயற்சியிலே இன்று முதல் ஈடுபடுகின்றேன்.


எனது வாழ்க்கையின் கதையை நான் கூறும்போது, சில பகுதிகளைச் சொல்லாமல் விடுவதுடன், சிலவற்றை மாற்றியும் சொல்கிறேன் என்பதை மறுக்காது, ஒப்புக்கொள்ள இன்று நான் தயார். உனது கதையைச் சொல்லும் போது, அவை நடந்த மாதிரியே மாற்றாமல் சொல்கிறாயா? அல்லது, நீ நல்லவன் என்பதை எடுத்துக்காட்டும் பகுதிகளை மட்டும் உரைக்கிறாயா? நீ சொன்னவை, செய்தவை யாவற்றையும் சொல்கிறாயா? அல்லது, நீ செய்தவற்றிற்கு வேறொருவர் அல்லது சம்மந்தப்பட்டவர் யாவரும்தான் காரணம் என்று குற்றம் சாட்டுகிறாயா? அல்லது நீ பொய்யாகத் தயாரித்திருக்கும் உனது மறைமுக அட்டவணைக்குச் சாதகமாக, சம்பவங்களை இங்குமங்கும் திரித்து மாற்றுகிறாயா? அல்லது என்ன நடந்தால் நன்றாயிருக்கும் என நீ விரும்புவதைக் கற்பனை பண்ணிக் கூறுகிறாயா? பிரச்சினையில் சம்மந்தப்படாதவர்களை இணைக்கிறாயா? அல்லது சம்பந்தப்பட்டவர்களை மறைக்கிறாயா? வேறொருவர் செய்யாததொன்றை, அவர் செய்ததாக வாதமிடுகிறாயா? உனது கதை, நல்லதோர் நாடகம் போலிருக்க வேண்டும் என நீ விரும்புவதால் தான் இப்படியெல்லாம் செய்கிறாயா? அல்லது உனது கற்பனைக் கதையை உன் குரல் சொல்வதை நீயே கேட்பதற்காக இப்படிச் செய்கிறாயா? அல்லது உனக்கு வேறு ஒன்றும் சொல்வதற்கு இல்லாதபடியால் இவ்வாறு பொய்யாகப் பேசுகிறாயா? உனது மனப்பான்மையின்படி நீ காண்பதைக் கூறுகிறாயா? இதுதான் நடந்திருக்கும் என நீ நம்புவதால் இப்படிச் சொல்கிறாயா? அல்லது இந்தக் கதைதான் சரி என வேறொருவரை நம்பவைப்பதற்காக இவ்வாறு கூட்டியும் குறைத்தும் கதை அளக்கிறாயா?

வாசகர்களே! எமது வாழ்வில் சில சமயங்களில் நாம் ஒவ்வொருவரும் மேற்கண்ட விதங்களில் ஏதோ ஒரு விதமாக நடந்திருக்கலாம். எமக்குப் புரிந்தது கைமண்ணளவு, புரியாதது விண்ணளவு! அலைபாயும் எமது மனமெனும் மந்தி, இங்குமங்கும் தனக்கு இஷ்டமானபடி தாவி தன்னிச்சையாய் செயற்படுவதால் ஏற்படும் விபரீதங்கள் ஏராளம். அதனால் தான் பகவான் சத்யசாயிபாபா எம் ஆசைகளுக்கு வரம்புகட்டி, எம் மனதினைக் கண்காணித்து கடிவாளமிடப் பழக வேண்டுமென்று அடிக்கடி தன் அருளுரைகளில் எடுத்துரைக்கிறார்.

ஆமாம் வாசகர்ளே! உங்கள் வாழ்வு ஒரு கதை போன்றது. ஆரம்பம், நடுப்பாகம், முடிவு என வாழ்க்கை விரியும். ஒரு அநுபவம் மற்றொன்றிற்கு உன்னை அழைத்துச் செல்லும். ஒவ்வொரு சம்பவமும் முழு வாழ்வையுமே பாதிக்கும். உங்கள் கதையில் வரும் ஒவ்வொரு பாத்திரமும் மிக முக்கியமானது. வாழ்வின் ஒரு பாகத்தில் உங்களது பங்களிப்பு, மிகுதி வாழ்வின் நிலையை நிர்ணயிக்கின்றது. வாழ்வில் எந்த இடத்தில் நீ நின்றாலும், அடுத்து என்ன நடக்கப்போகிறது என்பது, எப்போதும் உனக்குத் தெரியாமல் தான் இருக்கும். உன்னை விட்டுப்பிரியப் போவது யார், சேரப்போவது யார் என்பது உனக்குத் தெரியாமல் தான் இருக்கும். உனது ஜீவியத்தின் அடுத்த மிகுதி எப்படி மலரப் போகின்றது என்பது உனக்குப் புரியாத புதிராகத் தான் விளங்கும். உனது வாழ்வின் கதையை உள்ளபடியே நீ சொல்லாத போது, உண்மையைத் திரித்து மாற்றும்போது, சில சம்பவங்கள் சில நபர்களை மறைத்து நீக்கிவிடும்போது வாழ்வு உனக்குக் கற்பிக்க முயற்சிக்கும் பாடங்களை நீ கற்றுத் தேறி நற்பயனடைய உன்னால் முடியாது போய்விடும். வாழ்வில் காயப்பட்டு ஸ்தம்பித்துப் பின்னடைவதோ, விழிப்புணர்வுடன் சரிவரச் சமாளித்து முன்னேறுவதோ உனது கதையை நீ எவ்வாறு உணர்கிறாய், சொல்கிறாய் என்பதில் தான் தங்கியிருக்கின்றது.

உனது கதையை, வாழ்வுச் சம்பங்களை, உள்ளது உள்ளபடியே சொல்லாது இதுவரை தவறவிட்டிருக்கலாம். நீ சொல்பவற்றின் தாக்கத்தைக் கூட்டவோ குறைக்கவோ, கதையின் சில கதா பாத்திரங்கள், சம்பவங்களைத் தவறவிட்டோ, மாற்றியோ, முற்றிலும் விலக்கியோ சொல்லி யிருக்கலாம். நீ, மற்றவர்களுக்கும், உனக்கும் எடுத்துரைக்கும் சகலவற்றையும் இன்று அலசி விமர்சித்துக் கொள். உண்மையாக நடந்தவற்றை மட்டுமே நீ எடுத்துரைப்பதை இன்றுமுதல் நிச்சயப்படுத்திக் கொள். எனக்கு நானே கூறிக்கொள்ளும் கதைகளில் விவரங்களைச் சரிபார்த்து எனக்கு நானே உண்மையாக நடந்து கொள்ள இன்று முடிவு செய்கிறேன்.


மேலதிக தகவல்களிற்கு
அழையுங்கள் 905-270-1214



லலிதா புரூடி

**வீட்டில் பூச்சி, எலித் தொல்லையா?**

வீடுகள், தொடர்மாடி வீடுகள், தொழிற்சாலைகள், வியாபார நிலையங்கள் போன்றவற்றில் பூச்சி, எலித் தொல்லையா? கவலையை விடுங்கள். முற்றாக ஒழிக்க அழையுங்கள்



**Kanthan: 416.291.3997**





- No Spraying
- No Smelling
- No Moving

தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர் **ரவி நடராஜா**

தற்பொழுது Franklin Hall LLP Barristers & Solicitors ஆகியோர் இணைந்து சேவையாற்றுகிறார்கள்.

- வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றிய தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும், உரிய இழப்பீடுகள், மற்றைய இழப்பீடுகள், விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள் மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள் Accident & Traffic Ticket

(17 Years Insurance Claims Experience)

416.245.6555 - 2095 Weston Road, Suite 203, Toronto, ON
416.755.2801 - 2390 Eglinton Ave., E. Suite 223, Scarborough, ON
905.455.8591 - 83 Kennedy Rd. South, #1818, Brampton ON



# "இம்சை அரசன் 23ம் புலிகேசி" யின் வெற்றி நல்ல சினிமாவை விரும்புபவர்களுக்கு கிடைத்திருக்கும் வெற்றி

## நேர்காணல்: இயக்குனர் சிம்பு தேவன்



தமிழ்நாட்டில், திரைப்படத் துறையினரிடையே இப்போது அதிகம் பேசப்படும் திரைப்படம் "இம்சை அரசன் 23ம் புலிகேசி" தான்.

பரபரப்பாக ஓடிக்கொண்டிருக்கும் "இம்சை அரசன் 23ம் புலிகேசி" முதல் வார வசூலில் சரித்திரம் படைத்திருக்கிறது. ஏற்கெனவே இருந்த ரஜினிகாந்தின் "சந்திரமுகி" திரைப்படத்தின் வசூல் சாதனையை இப்படம் முறியடித்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. "இம்சை அரசன் 23ம் புலிகேசி" வரலாற்று பின்னணியில் நகைச்சுவையுடன் எடுக்கப்பட்ட முதல் தமிழ் சினிமா என்பதும் குறிப்பிடத்தக்கது. இருபத்தைந்து வருட இடைவெளிக்குப் பிறகு தமிழில் வெளிவந்திருக்கும் வரலாற்றுப்படம் இது. இப்படத்தின் இயக்குநர் சிம்புதேவனை, "விளம்பரம்" பத்திரிக்கைக்காக அவரது அலுவலகத்தில் சந்தித்தோம். இலங்கையின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் தன் குடும்பத்துடன் "இம்சை அரசன் 23ம் புலிகேசி"யை சென்னை கமலா தியேட்டரில் பார்த்துவிட்டு, திரையரங்கத்தை விட்டு வெளியே வரும்போது இயக்குனர் சிம்புதேவனிடம், "எனக்கு இது போன்ற காமடி (comedy) படம் ரொம்ப பிடிக்கும். இந்தப் படமும் மிகச் சிறப்பாக இருந்தது. வடிவேலின் நடிப்பு மிகமிக அபாரம்" என்று பாராட்டினாராம். நாம் நுழையும்போது, முத்தையா முரளிதரன் வீசிய இந்த பந்தில் சிக்சர் அடித்த சந்தோசத்தில் இருந்தார் சிம்புதேவன். இனி பேட்டி.

கேள்வி: இருபத்தைந்து ஆண்டுகளாக தமிழில் சரித்திரப் பின்னணி கொண்ட திரைப்படங்களே எடுக்கப்படவில்லை. இந்நிலையில் "இம்சை அரசன் 23ம் புலிகேசி" யை ஒரு சரித்திர கால திரைப்படமாக எடுக்கும் சிந்தனை உங்களுக்கு எப்படித் தோன்றியது?

சிம்புதேவன்: முதலில் என்னிடம் வேறு ஒரு கதைதான் இருந்தது. அதில், திரைக்கதை உத்தியில் ஒரு புதுமையை ஏற்படுத்தி, தயாரிப்பாளர் இயக்குநர் சங்கர் அவர்களிடம் சொன்னேன். எங்கள் விவாதத்தின் தொடர்ச்சியில் அந்தக் கதை மாற்றப்பட்டு, இன்னும் புதுமையாக ஏதாவது செய்யலாமே என்று முடிவானது. அப்போது ஆனந்தவிகடன் பத்திரிகையில் கார்ட்டூன் தொடராக (Strip cartoon) வந்த "இம்சை அரசன்" கதையை அவரிடம் சொன்னேன். உடனே சங்கர் அவர்கள் அதனையே எடுக்கச் சொன்னார். " பட்ஜெட்டைப் பற்றி யோசிக்க வேண்டாம். தமிழ் சினிமாவில் ஒரு நல்ல பதிவாக அப்படம் இருந்தால் போதும். சினிமாவில் நான் சம்பாதித்த பணத்தை சினிமாவிலேயே இழக்கத் தயாராகத்தான் இருக்கிறேன். எனவே தைரியமாக நீங்கள் விரும்பியதை செய்யுங்கள்" என்று சங்கர் சொன்னார். இப்படித்தான் "இம்சை அரசன் 23ம் புலிகேசி" க்கான பிள்ளையார் சுழி போடப்பட்டது. அதன் பிறகு நூலகத்தில் மூன்று மாத ஆராய்ச்சிகள் நடந்தது. கலை இயக்குனர் கிருஸ்ணமூர்த்தி, ஒளிப்பதிவாளர் ஆர்தர் வில்சன் எல்லோருமாக தொடர்ந்து விவாத்தில் ஈடுபட்டோம். தொடர்ச்சியான விவாதத்தில் "இம்சை அரசன் 23ம் புலிகேசி"யைச் சுற்றியிருந்த புகைமூட்டங்கள் விலகத் தொடங்கி, தெளிவான, ஓர் உயிருள்ள மனிதனாக எங்கள் முன் அவன் தோன்றினான்.

இந்தப்படத்தை அந்தக்கால நடப்புகளுக்கும் இந்தக்கால நடப்புகளுக்கும் இடையே நெய்திருக்கிறோம். கதை சரித்திர கால பின்னணியில் நடைபெற்றாலும், அதற்குள் இந்த கால நடப்புகளும் அது குறித்த விமரிசனங்களும் பொதியப்பட்டுள்ளன. இசையும் அவ்வாறே செய்யப்பட்டுள்ளது. பழைமையும் புதுமையும் சற்று கலந்தேயிருக்கும். புதிய வாத்திய கருவிகள் மூலம் பழைய மெட்டுகளை, அங்கங்கே நவீன பங்களிப்பாக செய்துள்ளோம். இது எங்களுக்கு மிகத் திருப்தியைத் தந்தது.

கேள்வி: தாங்கள் ஆனந்த விகடன் பத்திரிகையில் காட்டூனிஸ்டாக பணியாற்றியிள்ளீர்கள். அந்த பத்திரிக்கைத் துறை அனுபவங்கள் பற்றிச் சொல்லுங்கள்.

சிம்புதேவன்: ஊரிலிருந்து வெறும் களிமண்ணாக புறப்பட்டு சென்னை வந்த எனக்கு உருவம் கொடுத்தது ஆனந்தவிகடன்தான். கார்ட்டூன் என்ற புதிய தளத்தை எனக்கு ஆனந்தவிகடன்தான் அறிமுகப்படுத்தியது. நான் தாவரவியலில் இளங்கலை பட்டம் பெற்றவன். மதுரை தியா-கராயா கல்லூரியில் படிப்பை முடித்தும் ஆனந்தவிகடனில் சேர்ந்தேன். இயல்பிலேயே நான் ஒரு நல்ல ஓவியன். இருந்தாலும் கார்ட்டூன் என்ற ஊடகத்தின் நுட்பத்தை, ஆனந்தவிகடன் சொல்லிக் கொடுத்தப்போதுதான் தெரிந்துகொள்ள முடிந்தது. சொல்லப்போனால் நான் விகடனில் வேலைப் பார்த்த அந்த காலத்தைதான் என்னுடைய கல்லூரி காலமாகவே நான் கருதுகிறேன்.

கேள்வி: தற்போதைய காலகட்டம் விஜய், அஜித், சூர்யா, விக் ரம் போன்ற பெரிய நாயகர்களின் காலகட்டம். இந்தகாலத்தில் ஒரு நகைச்சுவை நடிகரை நாயகனாக நடிக்கவைத்து, வெற்றிப் பெறமுடியும் என்ற நம்பிக்கை உங்களுக்கு எப்படி வந்தது?

சிம்புதேவன்: சங்கர் அவர்கள் கொடுத்த பூரண சுதந்திரம்தான் முதல் காரணம். நான் மதுரை காந்தி அருங்காட்சியகத்தில் பழங்கால அரசர்களின் சிலைகளைப் பார்த்திருக்கிறேன். நமது பழைய திரைப்படங்களின் காட்டப்படுகிற மாதிரி கட்டுமஸ்தான உடம்புடன் கூடிய கம்பீரமான அரசர்களாக அந்த சிலைகள் இல்லை. தற்கால அரசியல் தலைவர்கள் போல அவர்களும் தொந்தியும் தொப்பையுமாக சாதாரண மனிதர்களாகவே இருந்தார்கள். எனது கதையை உருவாக்கிய போது அந்த அரசர்களின் சிலைதான் என் மனதில் இருந்தது. அதற்கு பொறுத்தமான நடிகராக வடிவேலுதான் என் மனதில் தோன்றினார். வடிவேலு நடிக்கும் போது எங்கள் கதைக்கு ஒரு உண்மைத் தன்மை கிடைக்கும் என்று கருதினேன். அது இப்போது படத்தைப் பார்க்கும் போது சரிதான் என்று தோன்றுகிறது.

கேள்வி: இன்றைய தமிழ் திரைப்படத்துறை போக்கு குறித்த உங்கள் எண்ணங்கள் எவ்வாறு உள்ளது?

சிம்புதேவன்: இன்று என்று இல்லை என்றைக்குமே தமிழ் சினிமாவின் போக்கு நல்ல முயற்சியை நோக்கித்தான் சென்று கொண்டிருக்கிறது. ஒரு இயக்குனராக எனது பார்வையில் நல்ல வாய்ப்பு கிடைப்பதுதான் மிக முக்கியமான விடயம். எல்ல காலத்திலும் திறமைசாலிகள் கண்டிப்பாக இருப்பார்கள். அவர்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பு கிடைத்தால், ஒட்டுமொத்தப் படமும் நல்ல இலக்கை நோக்கிச் செல்லும். அந்தவிதத்தில் எனக்கு சங்கர் அவர்கள் தயாரிப்பாளராக கிடைத்தது நான் செய்த பாக்கியம். "இம்சை அரசன் 23ம் புலிகேசி" திரைப்படத்துக்கு கிடைத்திருக்கும் வெற்றி நல்ல சினிமாவை விரும்பும் ரசிகர்களுக்கும் திரைப்படத்துறையினருக்கும் கிடைத்திருக்கும் வெற்றி.

கேள்வி: இந்தப் படத்திற்கு தணிக்கை குழுவின் மிருகவதை தடுப்புச் சட்டத்தினால் பாதிப்பு ஏற்பட்டு, வெளியாவது தாமதமானது. தற்போது தமிழ்நாட்டில் படம் வெளியாகிவிட்டாலும், கர்நாடகாவில் தடை விதிக்கப்பட்டுள்ளது. புலிகேசி என்ற சரித்திரப் புகழ்வாய்ந்த கர்நாடக அரசனை இந்தப் படம் அவமதிப்பதாக இதற்கு காரணம் கூறப்பட்டுள்ளது. இதைப்பற்றி உங்கள் கருத்தென்ன?

சிம்புதேவன்: தணிக்கைக் குழுவின் மிருகவதை தடுப்புச்சட்டத்தால் ஏற்பட்ட சிக்கல்கள் என்பது முழுக்க முழுக்க அரசாங்க பணி ரீதியாக ஏற்பட்ட முடக்கம். எல்லா இந்திய மொழிகளிலும் திரைப்படத்துறையினருக்கு இந்த பிரச்சினை இருக்கிறது. ஆனால், கர்நாடகா அரசு விடயத்தில் உண்மை இல்லை. புலிகேசி என்ற மாமன்னனின் மீது எனக்கும் மிகப் பெரிய மரியாதை உண்டு. புலிகேசி என்ற பெயர் தவிர்த்து, வேறு எந்த விதத்திலும் இந்தப் படத்திற்கும் அவருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

### சந்திப்பு: சிவதாணு

கேள்வி: தமிழிலுள்ள நல்ல இலக்கியப் படைப்புகளை நீங்கள் படமாக்குவீர்களா?

சிம்புதேவன்: கண்டிப்பாக படம் பண்ணுவேன். ஹொலிவுட்டின் "மெர்சண்ட் அண்டு ஐவரி" (Merchant and Ivory) மாதிரி நல்ல இந்திய நாவல்களை படமாக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு இருக்கிறது. இது எனது நோக்கம் மட்டுமல்ல எங்கள் தலைமுறையின் நோக்கம்.

கேள்வி: உங்களுடைய அடுத்த படமும் இதுபோல வித்தியாசமாக இருக்குமா?

சிம்புதேவன்: நல்ல படைப்புகளை கொடுக்க முயற்சிப்பதே எனது நீண்ட பயணத்தின் நோக்கம். எனவே இது மாதிரி படமாகவும்கூட அது இருக்கலாம்.


சுயாதீன கலை திரைப்பட மையம் - ரொரன்ரோ - கனடா

ஐந்தாவது தமிழ் குறும்பட, விவரணத் திரைப்பட விழா-செப்ரெம்பர் 16, 2006

இரு அரங்குகளில்

Fifth International Tamil Short Film / Documentry Festival

